இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 141 இதழ் : 22 திகதி: 03.12.2017 விலை : 20.00

மன்னார் மறை மாவட்டத்திற்கு புதிய ஆயர்

பேரருட்திரு இமானுவல் பெர்னாண்டோ



மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர் மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு பிதேலிஸ் லயனல் இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த 22.11.2017 அன்று நியமித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசப்பு ஆண்டகை அவர்கள் இளைப்பாறியதைத் தொடர்ந்து கடந்த இரண்டரை வருடங்களாக திருகோணமலை ஓய்வுநிலை ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக திருத்தந்தை அவர்களால் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் கடந்த வாரம் இலங்கைத் தமிழ் கத்தோலிக்க சமூகமும் மன்னார் மறை மாவட்ட மக்களும் மகிழ்ச்சியடையும் வகையில் புதிய ஆயர் அவர்கள் திருத்தந்தையால் நியமிக்கப் பட்டுள்ளார்.

ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் 1948 ஆம் ஆண்டு மே மாதம் 20ம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்து தனது உயர் கல்வியை கொழும்பு புனித பெனடிற் கல்லூரியில் கற்றார்.

தனது உயர் கல்விக்குப் பின் கொழும்பு தூய அலோசியஸ் குருத்துவக் கல்லூரியில் இணைந்து கொண்ட இவர் கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கல்வியை நிறைவு செய்து உரோம் ஊர்பானியா பாப்பிறைக் கல்லூரியில் இறையியல் கல்வியையும், அறநெறி இயலில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றார்.

ஆயர் இமானுவல் பெர்னாண்டோ ஆண்டகை 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ம் திகதி முத்திப்பேறு பெற்ற திருத்தந்தை 6ம் பவுல் அவர்களால் அருட்பணியாளராகத் திருநிலைப் படுத்தப்பட்டார். 1981 -1987ம் ஆண்டு வரை கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரில் விவிலியப் பேராசிரியராகப் பணியாற்றிய ஆயர் அவர்கள், 1987 ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று அங்குள்ள வோஷிங்டன் கத்தோலிக்க ·பல்கலைக்கழகத்தில் இறையியலில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

காணாமல் போனோர் தொடர்பாக நிலையான தீர்வு தேவை

கனேடியத் தூதுவரிடம் யாழ் ஆயர்

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பாக நிலையான தீர்வினை எடுக்க கனேடிய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென இலங்கைக்கான கனேடிய தூதுவர் டேவிட் மைக்கின்னன் அவர்களிடம் யாழ் ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கனேடியத் துதுவருக்கும் யாழ் ஆயருக்குமான சந்திப்பு 29.11.2017 புதன்கிழமை காலை ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது. இதன்போதே ஆயர் இவ்வாறு வலியுறுத்தினார்.

போர் இடம்பெற்ற காலப் பகுதியிலும் அதற்குப் பின்னரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அவர்களின் உறவுகளுக்கு அரசாங்கம் காலத்தை இழுத்தடிக்காது உரிய பதிலை வழங்கி தீர்வினை முன்வைப்பதற்கு கனடா அரசு இலங்கைக்கு அழுத்தத்தை வழங்க வேண்டுமெனக் குறிப்பிட்ட ஆயர், யாழ்ப்பாணத்தில் பட்டதாரிகள் உட்பட வேலைவாய்ப்பின்றி இருப்போருக்கு பயன்தரக்கூடிய வகையில் கனேடிய அரசு யாழ்ப்பாணத்தில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவற்றுக்குப் பதிலளித்த கனேடியத் தூதுவர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக தாம் நேரடியாகவும், ஐ.நா சபை மூலமும் இலங்கை அரசுக்கு தொடர்ந்து அழுத்தங்கள் வழங்கி வருவதாகவும், தமிழ் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் தாம் அக்கறையுடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மன்னார் மடுமாதா திருத்தலத்தில்

இலங்கை கத்தோலிக்க இளைஞர்களின் 71வது தேசிய மாநாடு

இலங்கைக் கத்தோலிக்க இளைஞர்களின் 71ஆவது தேசிய மாநாடு மன்னார் மடுமாதா திருத்தலத்தில் நவம்பர் 24,25,26 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

ஆரம்ப நாளில் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் வருகை தந்திருந்த சிங்களம்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

திருக்குடும்ப சபை ஆரம்பித்து 200 வருட நிறைவிற்கான செயற்றிட்டம்

திருக்குடும்ப சபை ஆரம்பித்து 200 வருட நிறைவினை கொண்டாடும் முகமாக இவ்வருடத்திற்கான செயற்றிட்டமானது திருக்குடும்பத்திற்குரிய பொதுத்திட்டமாக யாழ்மாகாணத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இதன் அடிப்படையில் "மாற்றத்துக்கான இளைஞர்கள்" என்ற கருப்பொருளில் மல்லாவி, ஜெயபுரம் போன்ற கிராமங்களில் உள்ள போரினால் பாதிக்கப்பட்ட 150 இளைஞர் யுவதிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அமைதியில் வாழவும், நல்லிணக்கத் தூதுவர்களாக மாறவும் வழிகாட்டும் அதே வேளையில் தங்கள் ....

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

திருப்பலியில் புகைப்படங்கள் எடுக்க வேண்டாம்

திருப்பலி ஒரு கேளிக்கை காட்சியல்ல- திருத்தந்தை பிரான்சிஸ்

திருப்பலி வேளையில் தங்களிடம் உள்ள தொலைபேசியைக் கொண்டு புகைப்படம் எடுப்பதில் கவனம் செலுத்துவோரைக் காணும்போது தான் அதிகம் வேதனை அடைகிறேன் என கார்த்திகை 8ம் திகதி திருப்பலியை மையப்படுத்தி மறைக்கல்வி உரை வழங்கியவேளையில் திருத்தந்தை அவர்கள் தெரிவித்தார்.

திருப்பலி ஒரு கேளிக்கைக் காட்சி அல்ல எனக் குறிப்பிட்ட திருத்தந்தை இந்தத் தவறை செய்து வரும் அனைவரும் அதனை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று விண்ணப்பித்தார்.

திருப்பலியின் நடுவே, பலியாற்றும் அருட்பணியாளர், "இதயங்களை மேலே எழுப்புங்கள்" என்று சொல்கிறாரே தவிர, "தொலை பேசிகளை மேலே எழுப்புங்கள்" என்று சொல்வதில்லை என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, திருப்பலி நேரத்தில் ஆண்டவர் மட்டுமே நம் முழுக் கவனத்தையும் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தூய யோசவ் வாஸ் ஆண்டு நிறைவு நிகழ்வில் பங்கெடுப்போம்

தூய யோசவ் வாஸ் ஆண்டு 2017 நிறைவு நிகழ்வுகள் 2018 தை மாதம் 13ம் திகதி சனிக்கிழமை சில்லாலையில் அமையவுள்ள தூய யோசவ் வாஸ் திருத்தலத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுகளாக உரைகள், கண்காட்சிகள், யாழ் ஆயர் தலைமையில் திருப்பலி மற்றும் பல்வேறு நிகழ்வுகள் காலை 10.00 முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும்.

திருநிலையினர், பொது நிலையினர் அனைவரையும் பக்தியுடன் பங்கெடுக்க இங்கிதமாய் அழைக்கின்றோம்.

நிறைவு விழா ஏற்பாட்டுக் குழுவினர்
யாழ். மறைமாவட்டம்

நூறு இடங்களில் இருந்து வருகை தருவோர் நமக்கான பிரயாண ஒழுங்குகள், உணவு, தங்குமிட வசதிகள் என்பவற்றை தங்கள் பங்குத்தந்தை மூலம் ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

எமது எண்ணம்

திருவருகைக் காலம் நமக்கு மீளாய்வுக் காலம்

வருட நிறைவில் பல விடயங்கள் மீளாய்வு செய்யப்பட்டு புது வருடம் புதுப்பொலிவுடன் தொடங்கப்பெறுவது வழக்கம். திணைக்களங்கள், வங்கிகள், நிறுவனங்கள், வாணிப நிலையங்கள் அனைத்திலும் கணக்கு வழக்குகளும் மற்றும் இருப்புகளும் மீளாய்வு செய்யப்பட்டு வருவது நாமறிந்த விடயம். கிராம அலுவலர் பிரிவுகளில் குடும்பப் பதிவு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு குடிசன மதிப்பீடு செய்யப்படுகின்றது. கல்லூரிகளில் கூட மாணவர்களின் நிலை பரீட்சை மூலம் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு வகுப்பேற்றம் நடைபெறுகின்றது. நாட்டின் சட்டத்துறையான பாராளுமன்றத்தில் கூட வரவு செலவுத்திட்டம் அதாவது பட்ஜட் (பாதீடு) வருட இறுதியில் தான் சமர்ப்பிக்கப்படுகின்றது.

உலகியல் சார்ந்த இவ்விடயங்களில் மீளாய்வுகள் இவ்விதம் நடைபெற்றுவர, இறையியல் சார்ந்த ஆன்மீக வாழ்வில் மீளாய்வுகள் நடைபெறாதிருப்பது கவலைக்கிடமானது. திருவருகைக் காலம், கிறிஸ்து பிறப்பு, புது வருடம் என உலகியல் தடத்தில் நின்று எம்மைத் தயார்படுத்தும் நாங்கள் அவற்றுக்கு முகம் கொடுக்க எந்தளவு தூரம் நம் ஆன்மா தயாராக உள்ளது என்பதை மீளாய்வு செய்து பார்க்கத் தவறிவிடுகின்றோம். இதனால் இறைவனின் அருட்கொடைகள் எமக்கு நிறைவாக கிடையாதுபோக வாழ்க்கையில் ஏங்கித் தவிக்கின்றோம்.

பாவிகளைத் தேடி பரமன் இயேசு பாருலகிற்கு வருகை தருகின்றார். "வாக்கு மனிதர் ஆனார் ; நம்மிடையே குடிகொண்டார்" என யோவான் நற்செய்தியாளரும், "இருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்" என எசாயா தீர்க்கதரிசியும் உரைத்த உரைக்கற்கள் நம் உள்ளங்களை அருட்டுணர்வால் உருட்டுவனவாக அமையவேண்டும். ஆனால் நம் மத்தியில் இத்திருவருகைக் காலம் மனம் மாற்றத்திற்கான காலமாக அமைவதற்குப் பதில் ஆடம்பரமான மற்றும் கேளிக்கைகளுக்குரிய காலமாக மாறி எமது உள்ளங்களை திசைதிருப்பி வருவது துரதிஷ்டவசமானது.

நமது பழைய புரையோடிப்போன சித்தாந்தங்களையும், சிந்தனைகளையும் விட்டுவெளியே வந்து எமது தற்போதைய சமுதாயச் சூழலில் கிறிஸ்து பிறப்பையும், அதனூடாக அவர் உலகுக்கு அளிக்க வந்த நிலையான சமாதானத்தையும் அறிவிக்கவேண்டிய உண்மைக் கிறிஸ்தவர்களாக நாம் உருமாற்றமும், உள மாற்றமும் பெறவேண்டும்.

கிறிஸ்து பிறப்பை முன்னோடியாக அறிவிக்க வந்த திருமுழுக்கு யோவான் "மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என அறிவித்ததைப் பார்க்கின்றோம். இத்தகைய மனமாற்றத்தை நாம் உருவாக்கிகொள்ள யாது செய்ய வேண்டும்? நமது சமூகத்தில் அரங்கேறும் நெறிபிறழ்வுகளுக்கு யாது காரணம்? யார் காரணம்? என்ற வினாக்களை ஆழமாக சிந்தித்து நோக்கின் பெரும் உண்மை ஒன்று வெளிப்படும். மறைகாட்டும் வாழ்வில் முறை தவறிவிட்டோம் என்பதே அவ்வுண்மையாகும்.

எமது சமூகத்தில் அண்மைக் காலமாக தலைதூக்கியுள்ள கலாசார சீரழிவுகள், நிகழும் தற்கொலை சம்பவங்கள், குடும்ப விவாகரத்துக்கள், அநாதரவாகும் சிறுவர்கள், தடம் மாறும் தலைமைத்துவங்கள், வாழ்வாதாரமற்று வாடிவதங்கும் சகோதர உறவுகள், புதிய புதிய நோய்கள், இயற்கையின் மாறுபாடு என்பன எல்லாம் எதனைக் காட்டுகின்றது? கிறிஸ்தவ வாழ்வின் விழுமியங்கள் நம்மிலிருந்து விடைபெற்றுச் செல்வதன் பிரதிபலிப்புக்களாகவே இவற்றைக் கருதவேண்டி உள்ளது.

திருவருகைக் கால தியானங்களும், முன்னேற்பாடுகளும் இவற்றைக் களைவதற்கான சாதனங்களாக மாறாதுவிடின் எம் விசுவாசம் எம்மில் செத்ததாகிவிடும். இறந்து பிறக்கும் குழந்தை போலவே கிறிஸ்துவின் பிறப்பும் எமக்குள் இறப்பாகிவிடும்.

உள்ளார்ந்த அர்த்தத்தோடு, உள்ளார்ந்த உணர்வோடு எதனையும் செய்பவர்களாக, பார்ப்பவர்களாக, சாதிப்பவர்களாக நாம் இருந்தால் மாத்திரமே ஆன்ம திருப்தி என்ற ஒன்று நமக்குள் வெளிப்படும். அத்தகைய ஆன்ம திருப்தியில் தான் ஆன்ம தாகம் கொண்ட ஆண்டவனைத் தரிசிக்க முடியும்.

ஆதரவற்று திக்கற்று நிற்கும் எமது சகோதர உறவுகளுக்கு கைகொடுக்கும் பணிகளில் ஈடுபடுவோம். மாற்று வலுவுடையோருக்கு மறுவாழ்வு கொடுக்கும் மகோன்னத மனிதர்களாக எம்மை மாற்றுவோம். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு கைகொடுப்பவராகவும், அநியாயமாக சிறையில் வாடுவோருக்கு நீதியான விடுதலையைப் பெற்றுக் கொடுக்க வழி செய்பவராகவும் செயற்படுவோம்.

சீரழிவுப் பாதைகளில் சுவடு பதிப்போரைக் கண்டு அஞ்சி ஒதுங்கிவிடாது அறத்தை எடுத்துரைத்துச் சீரிய வழியில் நல்வழிப் படுத்துவோம். எந்தக் கொடிய பாம்பும் மகுடிக்குக் கட்டுப்படும் என்பார்கள். "வேத வசனம் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் ; அது வீணாகத் திரும்பாது". அதனைக் கொண்டு சாத்தானின் ஏவற்கூலிகளாக ஏமாந்து நிற்கும் இளையோரை நிறைவாழ்வில் ஆற்றுப்படுத்துவோம். எங்கே நிம்மதி எனக் கேட்டு அங்கலாய்க்கும் அவல உள்ளங்களை அமைதியில் திடப்படுத்தி, அமைதியின் ஆண்டவனை அவர்கள் சுவைத்திட அன்புப் பணிபுரிவோம். திருவருகைக் காலத்தில் ஒளியின் மக்களாய் பயணிப்போம்.

அருட்பணி. எஸ். எமின்சிலி றொஷான்

நற்செய்தியாக வாழுமாறு இளையோருக்கு திருத்தந்தை அழைப்பு

மியான்மாருக்கு பயணம் மேற்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மியான்மார் அமல அன்னை பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றியதைத் தொடர்ந்து அங்கு குழுமியிருந்த இளைஞர்கள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

இன்றைய உலகில் இளையோர்கள் நற்செய்தியை அறிவிப்பவர்களாகவும், நற்செய்தியாகவும் வாழவேண்டுமென அழைப்பு விடுத்த திருத்தந்தை இவ்வுலகில் ஒலிக்கும் பல்வேறு இரைச்சல்கள் இறைவனின் குரலை அடக்கிவிடுவதாகவும் இந்நிலையில் இளைஞர்கள் நேரிய உள்ளத்தோடு இறைவனை வெளிப்படுத்தும் கருவிகளாக மாற வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இளைஞர்களில் சிலரை அருட்பணியாளர்களாக, துறவிகளாக இயேசு அழைக்கலாம் எனவும் சிலரை திருமண வாழ்வில் அன்பு நிறை தாயாகத் தந்தையாக அழைக்கலாம் எனவும் குறிப்பிட்ட திருத்தந்தை எதுவாக இருப்பினும் துணிவுடனும் தாராளமனதுடனும், மகிழ்வாகவும் வாழும்படி இளையோருக்கு ஆசிகூறினார்.

அன்னை மரியாளைப் போன்று நம்பிக்கையுடனும் துணிவுடனும் இயேசுவை இவ்வுலகிற்குக் கொண்டு செல்லுமாறு வேண்டுகோள் விடுத்த திருத்தந்தை நிறைவில் அங்கு குழுமியிருந்த அனைவருக்கும் இறையாசீர் வழங்கினார்.

திருத்தந்தையின் பயணம் மியான்மாரில் அமைதிக்கான பயணமாகும்

கர்தினால் சார்லஸ் போ

மியன்மாருக்கான 03 நாள் திருத்தூதுப் பயணத்தை நிறைவு செய்துகொண்டு யாங்கூன் அமல அன்னை பேராலயத்தில் திருத்தந்தை நிறை வேற்றிய திருப்பலியின் நிறைவில், அந்நாட்டு கர்தினால் சார்லஸ் போ அவர்கள் நன்றியுரை ஆற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மியான்மாரில் அன்பு மற்றும் அமைதி நிலவ திருத்தந்தை மேற்கொண்ட பயணம் அனைவருக்கும் உற்சாகத்தை அளித்துள்ளதாக தெரிவித்த கர்தினால் இளையோரை அமைதிப்படையாக மாறும்படி திருத்தந்தை விடுத்த அறைகூவல் மியன்மாரில் அமைதியில் இட்டுச் செல்லும் எனவும் குறிப்பிட்டார்.

நம்பிக்கையை உருவாக்குவது திரு அவையின் பணி எனவும் திருத்தந்தை நம்பிக்கையின் திருத்தூதர் எனவும் குறிப்பிட்ட கர்தினால் போ அவர்கள் திருத்தந்தை பயணம் மேற்கொண்ட மூன்று நாட்களும் மியான்மார் நாடு கிறிஸ்தவ நம்பிக்கையின் அருளில் மூழ்கி இருந்ததாகவும் குறிப்பிட்டார்.

மேலும் கர்தினால் சார்லஸ் போ குறிப்பிடுகையில், திருத்தந்தையின் பிரசன்னம் மியான்மார் நாட்டிற்குக் குணப்படுத்தலைக் கொண்டு வந்துள்ளதாகவும் இந் நேரத்தில் திருத்தந்தை நம் மத்தியில் இருக்கும் புதுமைக்காக மியான்மார் திரு அவையின் சார்பில் ஆண்டவருக்கு நன்றி சொல்கிறேன்.

திருத்தந்தையே! தாங்கள் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது தந்தையர்கள் ஒதுக்குப்புறமான மூலைக்குச் சென்ற அடுத்த திருத்தந்தையைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்று சொன்னீர்கள். இப்போது திருத்தந்தையாக மிக ஒதுக்குப் புறங்களிலுள்ள கத்தோலிக்கச் சமூகங்களை ஆசீர்வதித்துள்ளீர்கள்.

திரு அவை மீது தாங்கள் கொண்டிருக்கும் தந்தைக்குரிய அன்பால் நாங்கள் மிகவும் உள்ளம் உருகியுள்ளோம். இந்த நாட்டின் வரலாறு இன்றிலிருந்து ஆசீர்வதிக்கப்பட்ட தாய் இருப்பதாக. ஏனென்றால் திருத்தந்தை தனது பயணத்தால் இம்மண்ணை ஆசீர்வதித்துள்ளார் எனவும் தனது நன்றி உரையில் தெரிவித்தார்.

யாங்கூன் அமல அன்னை பேராலயம், மியான்மார் கத்தோலிக்கருக்கு மிகவும் முக்கியமானது. இப்பேராலயத்தின் கட்டுமானப் பணிகள் 1895 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, 1899 ஆம் ஆண்டில் நிறைவடைந்தன. மிகவும் அழகான மற்றும் உறுதியான இந்தப் பேராலயம் 1930 ஆம் ஆண்டு மே 5ம் திகதி நடந்த கடும் நிலநடுக்கத்தில் நிலைகுலையாது நின்றது. இரண்டாம் உலகப் போரில் ஜப்பானிய குண்டு வீச்சுக்கும் அது தப்பியது. ஆனால் 1944ம் ஆண்டு டிசம்பர் 14ம் திகதி கடுமையாகச் சூறையாடப்பட்டு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 2008 ஆம் ஆண்டு மே 2ம் திகதி நார்சிஸ் கடும் புயலில் சேதமடைந்து மீண்டும் புதுப்பிக்கப்பட்ட இவ்வாலயத்தில் திருத்தந்தை திருப்பலி நிறைவேற்றியமை அங்குள்ள கத்தோலிக்க மக்களுக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

பங்களாதேஷ் நாட்டிற்கு திருத்தந்தையின் திருத்தூதுப் பயணம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நவம்பர் மாத இறுதியில் பங்களாதேஷ்க்கான திருத்தூதுப் பயணத்தை மேற்கொண்டார்.

டாக்கா பன்னாட்டு விமான நிலையத்தில் பங்களாதேஷ் அரசுத் தலைவர் அப்துல் கமீட் அவர்கள் திருத்தந்தையை வரவேற்றதுடன், வரவேற்பு நிகழ்வில் அந்நாட்டு மண்ணையும் திருத்தந்தை ஆசீர்வதித்தார்.

பங்களாதேஷ் சாவாரில் உள்ள மறைசாட்சிகள் நினைவிடத்தை தரிசித்த திருத்தந்தை 1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் சுதந்திரப் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலியும் செலுத்தினார்.

அந்நினைவிடத்தில் உள்ள தங்கப் புத்தகத்தில் கையெழுத்திட்ட திருத்தந்தை அங்கு ஒரு மரத்தையும் நாட்டிவைத்தார்.

இறை இரக்கத்தாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ் மறைமாவட்ட ஆயரான ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகிய நாம் குருக்கள், துறவியர், பொது நிலையினர் ஆகிய இறைமக்களுக்கு விடுக்கும் திருவருகைக்கால சுற்றுமடல்

கிறிஸ்து இயேசுவில்
அன்புக்குரிய இறைமக்களே!

"ஆண்டவராகிய இயேசுவே வாரும்" (திரு.22:21) என்பது திருச்சபையின் வேண்டுதலாக தொடக்கத் திருச்சபையில் இருந்து இன்றுவரை ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த வேண்டுதலுடனேயே நாம் ஒவ்வொரு திருவழிபாட்டு ஆண்டையும் ஆரம்பிக்கின்றோம். இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு இறைவன் மனிதனாகி வந்ததை நினைவு கூருவதும், உலக முடிவில் நிகழவிருக்கும் மாட்சிமிகு இரண்டாவது வருகையை நம்பிக்கையோடு எதிர்பார்ப்பதும், "திருவருட் சாதனம், அருள்வாக்கு" வழியாக நிகழ்காலத்தில் எம்மை நாடிவரும் கிறிஸ்துவினால் ஊட்டம்பெற்று பொருத்தப்பாடான கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதும் இந்த திருவருகைக் காலத்தின் உட்கிடக்கைகளாக அமைந்து தகுந்த தயாரிப்புக்கு எம்மை அழைக்கின்றன.

"ஆண்டவருக்காக வழியை ஆயத்தப்படுத்தவும் அவருக்காக பாதையை செம்மைப்படுத்தவும்" (லூக்கா.3:4) அறைகூவல் விடுக்கும் திருவருகைக் காலத்தை தகுந்த முறையில் பயன்படுத்த இச் சுற்றுமடல் மூலம் அழைப்பு விடுக்கின்றோம்.

நிறைவுறும் தூய யோசவ்வாஸ் ஆண்டு

அழிவுறும் நிலையிலிருந்த இலங்கை கத்தோலிக்கத்துக்கு புத்துயிர் அளித்த தூய யோசவ் வாஸை நாங்கள் இலங்கையின் அப்போஸ்தலர் என்று மகிழ்வுடன் கொண்டாடுகின்றோம். நாம் கடந்து செல்லும் ஆண்டை தூய யோசவ் வாஸ் ஆண்டு என இலங்கை ஆயர் மன்றம் பிரகடனப்படுத்தியதிலிருந்து பல்வேறு செயற்திட்டங்கள் எமது மறைமாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் நீங்கள் ஆர்வத்தோடு பங்குபற்றியதையிட்டு உங்கள் அனைவருக்கும் நன்றியைக் கூறிக்கொள்கின்றோம். எமது மறைமாவட்டத்தில் தூய யோசவ் வாஸ் ஆண்டின் இறுதி நிகழ்வுகள் 2018 ஜனவரி 13ம் திகதியன்று சில்லாலையில் அமைக்கப்பட்டு வரும் தூய யோசவ்வாஸ் திருத்தலத்தில் இடம்பெறும். இந்நிகழ்வுகள் தொடர்பான விபரங்கள் உரியநேரத்தில் அறியத்தரப்படும். கண்காட்சி, உரைகள், திருப்பலி போன்றவற்றோடு ஒழுங்கமைக்கப்படும் இந்நிகழ்வில் எம் மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலிருந்தும் குருக்கள், துறவிகள், பொது நிலையினர்களை ஆர்வத்தோடு பங்கெடுக்க முன்வருமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

தூய யோசவ்வாஸிடம் காணப்பட்ட ஆன்ம தாகம், இறை சித்தத்தை எப்போதும் தேடி உய்த்துணர்ந்து பணியும் மனநிலை, தேவதாய் மட்டிலான பாசமும் பற்றும் இவ் வாண்டிலே உங்கள் மத்தியில் அதிகரித்திருக்கும் என நம்புகிறோம்.

இவ்வாண்டின் நிறைவை தூய யோசவ்வாஸ் பற்றிய சிந்தனையை முடிவுக்கு கொண்டுவரும்நிகழ்வாகக்கருதாமல் அவரது தூய வாழ்வைப் பின்பற்றவும் அவர் பரிந்துரையைப் பெற்று இறையருளை இன்னும் அதிகமாக பெற்றுக் கொள்ளவும் முனையும் ஒரு விசுவாசப் பயணத்தின் ஆரம்பமாக கருதுங்கள்.

மேய்ப்புப் பணி மாநாடு

"புதிதாய் வாழ்வோம்" என்ற விருதுவாக்கோடு "செயலோடு கூடிய விசுவாசம்" என்ற தொனிப்பொருளில், எமது "குமும வாழ்வு", "வழிபாட்டு வாழ்வு", "சாட்சிய வாழ்வு" என்பவற்றை நாம் சீர்தூக்கிப் பார்க்க முனைந்து நின்ற மேய்ப்புப்பணி மாநாட்டை நாம் கூட்டி ஓராண்டு நிறைவுக்கு வந்திருக்கிறது. இம்மாநாட்டின் ஓராண்டுப் பயணம் பற்றிய மீளாய்வு நடந்து வரும் சூழ்நிலையில் மாநாட்டின் பல தீர்மானங்களை நன்மனதோடு ஏற்று நீங்கள் ஆர்வத்தோடு நிறைவேற்றி வருவதையிட்டு மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். சில விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் தடைகள், சங்கடங்கள் தோன்றி இருப்பதையும் நாம் அறிவோம். புதுப்பித்தல் பயணம் என்பது இலகுவானது அல்ல. ஆழமான மனமாற்றத்தையும், பொறுமையான முயற்சிகளையும் வேண்டி நிற்பது. ஆகவே எதிர்வரும் ஆண்டிலும் புதிய உற்சாகத்தோடு மேய்ப்புப் பணி மாநாட்டுத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்குமாறு அனைவரையும் கோரி நிற்கின்றோம்.

இளையோர் ஆண்டு

நாம் எதிர்நோக்கி இருக்கும் 2018ம் ஆண்டில் உலகத் திருச்சபை தனது கவனத்தை இளையோரின் ஆன்மீக பயணத்தில் குவிக்க முனைகிறது. வருகின்ற ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இளையோர் சந்திக்கும் சவால்களையும் அவர்களது ஆன்மீக பயணத்தையும் ஆய்வு செய்ய ஆயர் மன்ற அமர்வு ஒன்றை உரோமாபுரியில் ஏற்பாடு செய்துள்ளார். இதனைக்கருத்தில்கொண்டும் எமது மறைமாவட்டத்தில் இளையோரின் இன்றைய நிலையை கருத்திலெடுத்தும் "இறைதிட்டம் தேடும் இளையோர் பயணம்" என்கின்ற கருப்பொருளில் 2018ம் ஆண்டை இளையோர் ஆண்டாக எமது மறைமாவட்டத்தில் பிரகடனம் செய்கின்றோம்.

இதனைக் மனங்கொண்டு எமது மறைமாவட்டத்தில் உள்ள பங்குகள், கத்தோலிக்க நிறுவனங்கள், ஆணைக் குழுக்கள், துறவறசபைகள், பாடசாலைகள் அடுத்த ஆண்டுக்கான மேய்ப்புப் பணிதிட்டமிடலை மேற்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம்.

வேலைவாய்ப்பின்மை, சரியான வழிகாட்டல் இல்லாமை, போதைப் பொருட்களின் பழக்கம் அதிகரிப்பு, வன்முறைகளின் வளர்ச்சி, இணைய சமூக வலைத்தளங்களின் ஆதிக்கம் எனப் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் எமது இளையோர்கள், திருச்சபையின் மேய்ப்புப் பணி அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படும் ஒரு பகுதியினராகக் காணப்படுகின்றார்கள். ஆகவே இவ்விடயத்தில்எல்லோரினதும் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

ஏழ்மையைத் தேடி வந்த தெய்வம்

"கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாக இருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவெடுத்து மனிதருக்கு ஒப்பானார்." (பிலி.2:6-7) என தூய பவுல் கிறிஸ்து பிறப்பின் மறைபொருளை விளக்குகின்றார். எவ்வாறு இறைவன் ஏழ்மை வடிவில் கீழ்நிலையில் இருந்த மனிதனைத் தேடி வந்தாரோ அது போல நாமும் பல்வேறு விதங்களில் நலிவுற்றுக் காணப்படும் ஏழையரை நோக்கி பயணிக்க வேண்டும் என்று ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பு விழாவும் அழைப்பு விடுக்கின்றது.

இன்று எம் மத்தியில் பொருளாதார ரீதியான ஏழைகளுக்கும் அப்பால் சிறையில் வாடுவோர், சித்திரவதைக்கு உள்ளாவோர், காணாமல் ஆக்கப்பட்டோர், அவர்களைத் தேடித் தேடி சோர்ந்து போய் வீதியோரத்தில் எமது கவனத்தை ஈர்க்க வாடி அமர்ந்திருக்கும் அவர்களது உறவுகள், போர் ஓய்ந்து எட்டு ஆண்டுகளின் பின்பும் தங்கள் சொந்த வாழ்விடங்களுக்குச் செல்ல முடியாமல் முகாம்களிலும் உறவுகளின் வீடுகளிலும் வாழ்வோர் எனப் பல தரப்பினர் ஏழைகளாக உலா வருகின்றனர். குரலற்ற இவர்களின் குரலாக ஒலிப்பதும், இவர்களைத் தேடிச் சென்று அரவணைப்பதும் இன்றைய கால கட்டத்தில் கிறிஸ்து பிறப்பு விழா எமக்கு விடுக்கும் சவாலாக உள்ளது. "மிகச் சிறியோராகிய எனது சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத்.25:40) என்ற இயேசுவின் வார்த்தைகளைக் கருத்திலெடுத்து எம்மைத் தேடி வந்த தெய்வத்தைப் போல நாமும் நலிந்தவரைத் தேடிச் செல்ல முன்வருவோமாக.

இறையாசீர் உங்களோடு இருப்பதாக!

கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும் பக்தியுள்ள

பேரருட்திரு
ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்
யாழ். மறைமாவட்ட ஆயர்.

நாம் மனம் மாற அழைப்பு விடுக்கும் திருவருகைக்காலம்.

முகவுரை

நாம் உறுப்புரிமை வகிக்கும் கத்தோலிக்கதிருச்சபை ஒவ்வொருவழிபாட்டு ஆண்டையும் பலகாலங்களாகப் பிரித்து வழிபாடுகளை முன்னெடுக்கின்றது. திருவருகைக் காலத்தோடு வழிபாட்டு ஆண்டு ஆரம்பமாவதை நாம் நன்கு அறிவோம். இந்த திருவருகைக்காலம்நான்குவாரங்களைக் கொண்டதாக அமைவதோடு, மனமாற்றத்தைக் குறித்து நிற்கின்ற ஊதா நிற உடுப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் நான்கு வாரங்களும் நான்கு ஒளிச் சுடர்கள் ஏற்றப்பட்டு, ஒளி வாழ்வுக்கு நாம் அழைக்கப்படுகின்றோம் என்ற தூண்டுதலைக் கொடுக்கின்றது. பாலக யேசுவின் பிறப்புக்காக மக்கள் காலம் காலமாகக் காத்திருந்தது போல நாமும் காத்திருந்து எம்மைத் தயார்படுத்தித் தகுதியான முறையில் அவரை வரவேற்று எமது உள்ளத்தில் ஏற்றுக் கொள்ள எம்மை நாம் தயார்படுத்த வேண்டும்.

முன் ஆயத்தங்கள்

சாதாரண மனித வாழ்வில் "காத்திருத்தல்" என்பது நடைமுறையில் இருக்கும் விடயமாகும். நண்பனின் அல்லது உறவினர்களின் வருகைக்காக நாம் காத்திருந்து பல முன் ஆயத்தங்களைச் செய்கின்றோம். குழந்தைப் பேற்றுக்காகக் காத்திருக்கும் தாய் அதன் வருகைக்காக பல தயார்படுத்தல்களோடு மகிழ்வோடு காத்திருக்கின்றாள். எம் இல்லங்களில் நடைபெறும் பல நல்ல நிகழ்வுகளுக்காக பல நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளுகின்றோம். இவ்வாறு உலகம் சார்ந்த பல நடவடிக்கைகளுக்கு எம்மைப் பல்வேறு விதமாக தயார்படுத்தும் நாம் மெசியாவின் வருகைக்காக ஆவலோடும், ஆசையோடும் காத்திருக்க வேண்டும். இறைவனின் வருகையை எதிர்பார்த்திருப்பதோடு மட்டுமல்ல நம்மைத் தகுதி உள்ளவராகஇறைவன்காணுமாறுநம்மை நாமே தயாரிக்கவும் அழைக்கப்படுகின்றோம்.

திருமுழுக்கு யோவானின் அழைப்பு

இறைவனைச் சந்திப்பதற்கு எம்மைப் புனிதமாக்குவதற்காக எமக்கு முன்மாதிரிகையாக திருமுழுக்கு யோவானை திருச்சபை அடையாளப்படுத்துகின்றது. அன்று மெசியாவின் வருகைக்காக மக்களை தயார்படுத்திய திருமுழுக்கு யோவான் இன்று நம்மை நாமே எப்படித் தயார்படுத்த வேண்டும் என்பதற்கான பதிலைத் தருகின்றார். ஏற்கனவே மரங்களின் வேர் அருகே கோடரி வைத்தாயிற்று நற்கனி தரா மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு தீயில் போடப்படும் (லூக் 3:9) என்ற எச்சரிக்கை வார்த்தையின் ஊடாக மனம்மாறாவிட்டால் ஏற்படும் ஆபத்தை உணர்த்துகின்றார் அத்துடன் பாலக யேசுவின் பிறப்பை முன்னறிவித்துஅவருடையமகிமையைஎடுத்தியம்பி, மனம் திரும்பியதற்கான செயற்பாடுகள் எவை என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றார். மனமாற்றத்துக்கான வெளி அடையாளமாக திருமுழுக்குப் பெற்றுப் புதுப் படைப்படைய வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றார்.

மனமாற்றம் கட்டாயமானது

ஒவ்வொரு மனிதனும் பாவியாக இருப்பதாலும் பாவ நாட்டங்களுக்குள் வாழ்வதாலும் பாவ வாழ்வில் இருந்து விடுதலை பெற மனமாற்றம் கட்டாயமாகத் தேவையாக உள்ளது. இருளில் இருந்து ஒளியை நோக்கிய பாவத்தில் இருந்து, புனித வாழ்வை நோக்கிய சாவில் இருந்து, உயிர்ப்பை நோக்கிய வாழ்வுக்குள் நாம் செல்ல போலித்தனமற்ற உண்மையான மனமாற்றம் அவசியமாகின்றது. நம்முடைய வாழ்வில் நாம் செய்யும் குற்றங்களையும், தவறுகளையும், பாவங்களையும் ஏற்றுக்கொள்ள மறுத்து நியாயப்படுத்துகின்றோம். இந்நிலை நேர் எதிராக மாறி நாம் குற்றம் செய்தவர்கள் என்பதை முழுமனதோடும், துணிவோடும் ஏற்றுக்கொள்வதோடு, தொடர்ந்து பாவம் செய்யாமல் வாழும்போது மனமாற்றம் அர்த்தம் பெறுகின்றது.

உள்ளத்தைக் குடிலாக மாற்றுவோம்

கிறிஸ்து பிறப்புக்காக எம்மைத் தயார்படுத்த, எமக்குப் பெரும் கொடையாகத் தரப்பட்ட இத்திருவருகைக்காலம், நாம் மனம் மாற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. பாலக யேசுவின் பிறப்புக்கு எமது உள்ளத்தின் புனிதத் தன்மை முக்கியமானது. அன்று பெத்தலேகம் மாட்டுக்குடில் பாலக யேசுவின் பிறப்பால் பெருமை பெற்றது போல எமது உள்ளக் குடிலும் புனிதமாக இருந்தால் அங்கே மெசியாவின் பிறப்பு நிகழும். எமது உள்ளமும் மகிழ்ச்சியால் பெருமை கொள்ளும். உள்ளத்தில் பிறக்கின்ற பாலக யேசு தொடர்ந்தும் வாசம் பண்ண வேண்டுமாக இருந்தால் புனிதமான வாழ்வு தொடர்ந்து பேணப்பட வேண்டும்.

முடிவாக

திருவருகைக் கால நான்கு வாரங்களுக்கும் எமக்குத் தரப்படும் வாசகங்கள் அனைத்தும் விழிப்பாயிருக்கவும், மன மாற்றம் பெறவும் வலியுறுத்துவதோடு, மெசியாவின் வருகையை எமக்கு எடுத்துக் கூறுகின்றன.

காலமும் நேரமும் தெரியாத அவரின் வருகைக்கு எம்மைத் தயார்படுத்துவோம். இக்காலத்தில் வழங்கப்படும்இறைவார்த்தைகளின்மதிப்பீடுகளை உள்வாங்கி எமது வாழ்வில் அர்த்தம் கொடுப்போம். நாம் சந்திக்க இருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா எமது தனிப்பட்ட வாழ்வில் சமாதானத்தையும், அருளையும் தரவும் மன்றாடுவோம். நற்கனி கொடுக்கும் மரங்களாக வாழ்ந்து எம்மைத் தயார்படுத்தி வாழ்வுக்கு அர்த்தம் கொடுப்போம்.

இ.அ.அமலரட்ணம்

யாழ் ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆளுமைப் பண்புகளும் இரண்டாம் வருடப் பணிநிறைவுகளும்

அ. ஆயரின் ஆளுமைப் பண்புகள்

1. ஆயர் அவர்கள் இதயத்தில் அன்பும் இரக்கமும் நிறைந்தவர். திருத்துவதற்காகக் கண்டித்தாலும் அன்பான தந்தைபோல மீண்டும் அன்போடு அணைத்து அதே குருக்களின் வாழ்வை மேம்படுத்துவது உண்மையிலே இவரது உயர்ந்த ஆன்மீகப் பண்பு. இவரது தந்தைமைப் பண்பை நினைத்து நான் பல தடவை எனக்குள் சிரித்திருக்கின்றேன். இரு பிள்ளைகளுக்கிடையில் சண்டை ஏற்படும் போது முதலில் வந்து முறையிடும் பிள்ளைக்கு, "ஓ என்ர பிள்ளைக்கு அடிச்சுப் போட்டாரோ. சா பிள்ளைக்கு நொந்து போச்சுது. பொறு. அவர் வரட்டும் அவருக்கு நல்ல அடிகொடுக்கிறன்" என்பார்கள் அன்புள்ள பெற்றோர். பின்னர் மற்றப் பிள்ளை வந்து முறையிடும்போது அவருக்கும் அதே கதையைக் கூறி ஆறுதல் சொல்வார்கள். எல்லாப் பிள்ளைகளையும் அரவணைக்கும் அன்புத் தந்தை அல்லது தாயின் நல்ல பண்பு இது. மேலும் ஆயர் தனக்கு அன்புகாட்டுவோருக்கு நன்றியாகவும் நடந்துகொள்பவர் என்பதும் வெளிப்படை.

2. இவரை நன்கறிந்த வயதான ஆயர் இல்லப் பணியாளர் ஒருவர் இவரைப்பற்றி எனக்குக் கூறியது "பிசப் எப்பவும் நீதியாகத்தான் நடப்பார்." இதை இவர் குருக்களை உயர்கல்விக்கு அனுப்பியமை மற்றும் அவர்களது பணிநியமனங்கள் என்பவற்றில் காணலாம். ஒரு தடவை மறைமாவட்ட நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய ஒருவர்குருவுக்கு எதிராகச்செயற்பட்டபோது பதவிநீக்கம் செய்யப்பட்டார். ஆனால் ஆயரோ அவருக்கு எங்காவது வேலை எடுத்துக்கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு இருந்தார். இவரது இந்த உயர்ந்த கனவான் மனப்பாங்கு (magnanimity) ஒரு நல்ல பண்பு.

3. குருக்களை நேசிப்பவராகவே ஆயர் உள்ளார். தான் குருக்களை நெறிப்படுத்துவதற்காகக் கண்டித்தாலும் குருக்களை வேறு எவரும் எவ்வகையிலும் தாக்க விடமாட்டார். எவராவது தாக்கினால் தன் சொந்தப் பிள்ளைக்கு அடிவிழுந்ததுபோல உணர்வார். தன் குருவை வேறு எவருக்கும் குறைத்துப் பேசமாட்டார். 'வேறை இடங்களிலை நடக்கிறதுகளைப் பார்க்கேக்கை, எங்கடை சுவாமிமார் எவ்வளவோ திறம்." என்றே அடிக்கடி கூறுவார்.

4. இறைவன் தன் குருக்களுக்குக் கொடுத்துள்ள தனித்துவமான ஆற்றல்களையும் திறன்களையும் அடையாளம் கண்டு அவற்றிற்குப் பொருத்தமான உயர்கல்வி, பணிநியமனம் வழங்குவது இவரது நிர்வாகத்திறனின் பலங்களில் ஒன்று.

5. சொல்லவேண்டிய நல்ல விடயங்களை எவராயிருந்தாலும் தயக்கமின்றிச் சொல்லியே தீருவார். இது நன்மைகளையே ஏற்படுத்திவருவது கண்கூடு.

6. நகைச்சுவையாகப் பேசி வயிறுகுலுங்கச் சிரிக்கவைப்பவர் நம் ஆயர் என்பது இவரோடு பழகியவர்கள் கூறும் கருத்து.

7. சமூகத்தின் பல்துறையினருடனும் நல்லுறவு பேணுவது இவரது ஆளுமைப் பலங்களில் இன்னொரு முக்கிய பரிமாணம். இதை மறைமாவட்டத்தின் நலன்களுக்கு அவர் நன்கு பயன்படுத்தி வருகின்றமை கண்கூடு.

8. நம் ஆயருக்கு இறைவன் அளித்துள்ள கொடைகளில் கல்வித்துறை அனுபவம் மிகமுக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. கல்வி முன்னேற்றமே சமூக முன்னேற்றத்திற்கு முக்கிய காரணி என்று நம்பிச் செயற்படுவதை இவர் செயற்படுத்தும் திட்டங்களில் காணக்கூடியதாக உள்ளது.

9. எந்தக் கூட்டமாக இருந் தாலும் ஆயர் அவர்கள் முன்கூட்டியே நன்கு திட்டமிட்டே வருவார். இதனால் கூட்டம் வீண் நேர விரயமின்றி முடியும். அண்மையில் குருக் கள் ஆலோசனை மன்றக் கூட்டத்திற்கு (Senate) திகதி குறிக்கப்பட்டிருந்தது. அப்போது ஆயர் காய்ச்சலாக இருந்தார். கூட்டத்தை இரத்துச் செய்வார் என்றே எதிர்பார்த்தேன். ஆனால் கூட்டத்திற்கு வந்து அனைத்தையும் நல்ல முறையில் நடாத்திமுடித்துச் சென்றார். அண்மையில் குருக்களுக்கான வருடாந்த தியானம் இடம்பெற்றது. தியானத்தை நெறிப்படுத்தும் குருவின் வருகை நிச்சயமற்றதன்மை கொண்டிருந்ததாக உணர்ந்தபோது தானே நடாத்துவதற்குத் தன் தியானக் குறிப்புகளைக் கைகாவலாகக் கொண்டுவந்திருந்தார்.

10. திருச்சபையின் வடக்கையும் தெற்கையும் இணைக்கவேண்டும் என்ற சிந்தனை ஆயரில் மேலோங்கி நிற்கின்றது. குருமட மாணவர்களை களத்துறைக் குருமடத்திற்கு ஒரு வருடப்பயிற்சிக்கு அனுப்பி வைக்கின்றமை அதன் வெளிப்பாடுகளில் ஒன்று. தெற்கு ஆயர்களை இங்கு வரவழைக்கவேண்டும் என்பதிலும் அக்கறை கொண்டு செயற்படுகின்றார். கருதினால் மல்கம் ரஞ்சித், ஆயர் மக்ஸ்வெல் சில்வா ஆகியோரின் வருகை இதையே வெளிப்படுத்துகின்றது. இவரது இத்தகைய அணுகுமுறையை அடையாளம் கண்டு தெற்கில் இவரை நிகழ்வுகளுக்கு அழைக்கின்றனர்.

11. இலங்கை ஆயர் மன்றம் நம் ஆயருக்கு மூன்று முக்கிய மேய்ப்புப் பணிப் பொறுப்புகளை வழங்கியுள்ளது. நம் ஆயரின் சிறந்த ஆற்றல்களை ஆயர்கள் அடையாளம் கண்டுள்ளமையை எண்ணி நாம் பெருமைப்படுகின்றோம்.

12. ஆயர் அவர்கள் அரசியல்வாதிகளை நன்னெறிப்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது. வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்களுக்குப் பிரச்சினை ஏற்பட்டபோது தலையிட்டுச் சீராக்கியது இதற்கு உதாரணம். இவரின் புத்திசாதுரியத்தைக் கருத்தில் கொண்டு அவர்கள் இவரிடம் ஆலோசனை கேட்பதுண்டு.

13. ஆயர் அவர்கள் நமது இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றித் தவிப்பதை உணர்ந்து வெளிநாடுகளுக்குச் செல்லும்போது 'வடக்கிற்கு வந்து தொழிற்சாலைகளை ஆரம்பியுங்கள்' என்று அழைப்பு விடுத்து வருகின்றார். சுற்றுலாத்துறை அமைச்சு நிர்வாகிகள் இத்துறைப் பயிற்சிநெறியை ஆரம்பிக்க இடம் தேடியபொழுது காங்கேசன்துறையிலுள்ள ஹோட்டல் இப்பயிற்சிக்குப் பொருத்தமானதெனப் பரிந்துரை வழங்கினார். அவ்வாறு ஆரம்பிப்பது நம் இளைஞருக்கான வேலை வாய்ப்பைத் தரும்.

14. ஆயர் எப்போதும் நடைமுறையாகவே சிந்திப்பார் பேசுவார். கற்பனாவாதம் இவரில் எள்ளளவும் காணமுடியாது.

> **“ ஆயர் எப்போதும் நடைமுறையாகவே சிந்திப்பார் பேசுவார். கற்பனாவாதம் இவரில் எள்ளளவும் காணமுடியாது. ”**

ஆ. ஆயரின் இரண்டாம் வருடப் பணிகள்

கல்வி வளர்ச்சிப் பணிகள்

1. அகவொளி நிறுவனத்தில் தற்போது அயர்லாந்துப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடு உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமாப் பயிற்சிநெறி இடம்பெற்றுவருகின்றது. இங்கு உளவியல் மற்றும் உள ஆற்றுப்படுத்தல்துறையில் விஞ்ஞானமாணிப் பட்டப் படிப்பை மேற்கொள்ள ஆயர் முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றார். இதன் முதற்கட்டமாக அகவொளி இயக்குநர் கொழும்பு மறை மாவட்டத்தின் அக்குயனஸ் கல்லூரி அதிபரை அண்மையில் சந்தித்து இதற்கான ஆரம்ப வேலைகள் பற்றிய கலந்துரையாடியுள்ளார். அக்குயனாஸ் கல்லூரி பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் அங்கீகாரத்தோடு இயங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

2. திருமறைக் கலாமன்றத்திற்கு அக்குயனாஸ் கல்லூரியோடு இணைந்து ஆங்கில டிப்ளோமாப் பாடநெறியை ஆரம்பிப்பதற்கு ஆயர் அனுமதி வழங்கியுள்ளார்.

3. கல்வித்துறையில் சிறந்து விளங்கும் மொன்ற்பேட் (Montford) சபை அருட்சகோதரர்களை அழைத்து அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் யாழ்-ஊர்காவற்றுறை வீதியில் அல்லைப்பிட்டிப் பகுதியில் சர்வதேச பாடசாலை அமைப்பதற்கு ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

4. யாழ் சம்பத்தரிசியார் கல்லூரியில் தொழில் நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு இரண்டு மாடிக் கட்டிடம் கொண்ட தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை அமைக்கும் பணி நிறைவடையும் நிலையிலுள்ளது.

5. முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதிக்கு வந்துள்ள கப்பூச்சியன்சபைக் குருக்கள் ஏற்கனவே அங்கு தொழில்நுட்பக்கல்லூரியை ஆரம்பிப்பதற்காகக் காணி துப்புரவாக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளனர். கட்டடவேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

6. புனித யோசப் வாஸ் கல்லூரிக்கெனத் தனிக்கட்டடம் ஒன்றை வழங்கி அக்கல்லூரியின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்துள்ளார்.

7. தான் செய்யப்போவதாகக் கூறுவதைச் செய்தே முடிப்பதை அவரது செயல்கள் பல வெளிப்படுத்தி நிற்கின்றன.

மறைமாவட்ட நிதிவளத்தைப் பெருக்குதல்

1. நம் மறைமாவட்டத்தின் நிதி மூலங்களில் ஒன்றாக விளங்கிய தென்னந்தோட்டங்கள் யுத்தத்தின்போது மோசமாக அழிக்கப்பட்டது. ஆயர் அவர்கள் கத்தோலிக்க நிதிநிறுவனத்தின் உதவியோடு இத்தோட்டங்களை அபிவிருத்தி செய்துவருகின்றார்.

2. வெளிநாட்டு ஆன்மீகப் பணியகங்களில் பணியாற்றும் குருக்களிடம் மறைமாவட்ட வளர்ச்சிக்குத் தம்மாலான பங்களிப்புச் செய்யுமாறு ஆயர் கேட்டபோது அவர்களும் நல்மனதோடு பங்களிப்புச் செய்து வருகின்றனர்.

ஆன்மீகப் பணிகள்

1. புனித யோசப் வாஸ் அடிகளார் திருத்தலத்தை உருவாக்கும் நோக்கோடு அவர் பணிபுரிந்த சில்லாலையில் காணி வாங்கப்பட்டு அக்காணி துப்புரவாக்கப்பட்டு மட்டப்படுத்தப்பட்டுள்ளது. கட்டடவேலைகள் ஆரம்பமாகவுள்ளது.

2. பக்தர்களின் நலன் கருதி, தும்பளை லூர்து அன்னை திருத்தலத்தில் அழகிய நற்கருணைச் சிற்றாலயம் ஒன்றை அமைப்பதற்கான ஆயத்த வேலைகளை ஆயர் மேற்கொண்டுள்ளமைபெருமகிழ்ச்சி தரும் விடயம்.

3. சென்ற வருடம் திட்டமிட்டது போன்று இவ்வருடம் உடையார்கட்டு மற்றும் மணியம்தோட்டம் புதிய பங்குகளாக உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வாறே கட்டைக்காடு புதிய பங்காக உருவாகியுள்ளது.

4. ஏற்கனவே தான் திட்டமிட்டது போன்றே கிளி / முல்லை மறைக்கோட்டத்தை இரண்டாகப் பிரித்துள்ளமை பலரின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

5. யாழ் மறைமாவட்டத்தின் அடுத்த வருட பணிக்குவியமாக, அதனை இளைஞர் ஆண்டாக அறிவித்து இளைஞர் வாழ்வை மேம்படுத்த ஆயத்த வேலைகள் இடம்பெறுகின்றது.

6. எமது மக்களுக்கான ஆன்மீகப் பணியை விரிவுபடுத்த லியோன் நகர் (பிரான்ஸ்) புனித யோசப்சபை அருட்சகோதரிகளை வரவழைத்து மணற்காட்டுப் பங்கிலும், சல்வற்றோறியன்சபை அருட்சகோதரிகளை அழைத்து அல்லைப்பிட்டிப் பங்குகிலும் பணிக்கு அமர்த்தியுள்ளார்.

7. யோர்மன் ஆன்மீகப் பணியகத்தின் பங்களிப்பில் கொழும்புத்துறை புனித சூசையப்

அருட்பணி இராசேந்திரம் ஸ்ரலின்

பர் முதியோர் இல்லத்தில் விசாலமான இன்னொரு கட்டடம் அமைக்க அத்திவாரமிடப்பட்டுள்ளது.

குருக்களின் வாழ்வை மேம்படுத்தல்

1. பூநகரிப் பங்குத்தந்தையர் எத்தனையோ வருடங்களாகத் திருப்பொருட்கள் அறையிலேயே தியாகத்தோடு வாழ்ந்து வந்துள்ளனர். ஆயர் அவர்கள் புதிய பங்குமனை கட்டிக்கொடுத்துள்ளார். அவ்வாறே அடுத்ததாக கூழாமுறிப்புப் பங்கிலும் குருமனை கட்டப்படவுள்ளது.

2. மக்களுக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்த ஆயர்கள், குருக்கள் தம் இளைப்பாறுதலை நிம்மதியோடு வாழவேண்டும் என்ற நோக்கில் அவர்களுக்காக நல்லாயன் நம்பிக்கை நிதியம் ஒன்றை ஆயர் ஆரம்பித்துள்ளமை குருக்களுக்கு மகிழ்ச்சியளித்துள்ளது. அவ்வாறே இளைப்பாறிய ஆயர் மற்றும் குருக்களுக்கான எமிலியானுஸ் இல்லத்தையும் அதன் சேவைகளையும் இன்னும் மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளார்.

3. வளலாயில் குருக்கள் மற்றும் குருமட மாணவர்களின் விடுமுறை இல்லம் யுத்தத்தால் அழிவுற்ற நிலையில் இருந்தது. ஆயர் கடற்படையினரின் துணையோடு அழகிய ஆயர் யஸ்ரின் இல்லம் ஒன்றையும் சிற்றலாயத்தையும் அமைத்துள்ளார்.

நிறைவாக: ஆயர் நல்லது செய்யும்போது அவருக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பது இறையரசு வளர்ச்சியெற முக்கிய பங்களிப்பாக அமையும்.

காவலன் கலசம்

காவலன் கண்மணிகள்

அன்புக் கண்மணிகளே!

அவர்கள் தெய்வங்கள்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று இருக்கலாம். தற்போது நாகரீக உலகின் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று கூறுவதற்கு வெட்கப்படுகிறார்கள். பெற்றோரை எளிதாக மறந்து விடுகிறார்கள். சில வீடுகளிலும் சரி முதியோர் இல்லத்திலும் சரி தங்கள் வேதனையைப் பகிர்ந்து கொள்ள முடியாத எத்தனை எத்தனை பெற்றோர் ஏங்கித் தவிக்கிறார்கள். இதேபோன்று தான் அன்று பெத்சயிதா குளக்கரையில் முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல் நலம் அற்ற நிலையில் படுத்துக்கிடந்தவர். என்னைக் குளத்தில் இறக்கிவிட ஆள் இல்லை என்றார். (யோவா 5:1) அவருக்கு அன்பு கிடைக்காத ஏக்கமும் வேதனையில் அவரது வார்த்தையில் இதை ஒரு வெறும் நிகழ்வாக எண்ணக்கூடாது. அதைப்போன்று கவலைப்படும் பெற்றோர் எத்தனை பேர் சிறு பிள்ளைகள் கூறுவார்கள் பெற்றோருக்காகச் செபிக்கிறோம் என்பார்கள். செபிப்பதால் எல்லாம் சரியாகி விடும் என்ற சொல்லமுடியாது. பெற்றோருக்கு பிள்ளைகளின் பரிவு, அன்பு, பணிவிடை மிக மிக அவசியம். அதனால் அவர்களது உள்ளக்காயங்கள் ஆறும்.

முதியோர் இல்லங்களில் தள்ளிவிடும் பி ள்ளைகளை இறைவன் வன்மையாகக் கண்டிக்கிறார். பெற்றோர்கள் நோய்வாய்ப்பட்டிருப்போது பிள்ளைகள் கவனிப்பதில்லை. சிலர் பெற்றோரை வீட்டை விட்டே விரட்டிவிடுகிறார்கள். சில பிள்ளைகளுக்குப் பெற்றோரை அறிமுகப்படுத்த வெட்கப்படுகிறார்கள். முதியோராகிய பெற்றோர் படும் வேதனை சொல்லில் அடங்காது.

சில பிள்ளைகள் அம்மாவை விரும்பி அப்பாவைப் புறந்தள்ளுவோர் பலர் அப்பாவின் சிறப்புப்பற்றி அறியாதவர்கள். அம்மாதான் எங்களைப் பெற்றவள் என்று அப்பாவை அறிய சில வரி தந்தை தனது குடும்பத்துக்குச் சீரான பொருளாதார வசதிகளை அளித்தால்தான் அம்மா தனது கடமைகளைச் செய்யமுடியும். குழந்தைகளுக்குப் பாலூட்டு வதிலிருந்து பாடசாலைச் செலவுகள் உடை உணவு தாயின் பின் இருக்கும். தந்தையின் அத்திபாரம் எமக்குத் தெரிவில்லை. தாய் பத்துமாதம் சுமந்தார் தந்தை மனைவி, பிள்ளைகளை தான் இறக்கும் வரை சுமக்கிறார். ஆனால் பெற்றோர் தமக்கென்று எதையும் சிந்திப்பதில்லை. எல்லாம் பிள்ளைகளும் என்று அனைத்தையும் தியாகம் செய்கிறார்கள். அப்படியாகப் பெற்றோருக்குப் பிள்ளைகளின் அன்புப் பரிசு முதியோர் இல்லம்.

சில பெற்றோரின் வேதனைகள் சில...

1) முதல் வகுப்பில் உன்னை முதலிடத்தில் உள்ள பள்ளியில் சேர்க்க நன்கொடை வழங்க முடியாமல் நிலத்தை விட்டேன்.
2) அடுத்த வகுப்புக்கு ஆடுகளை விற்றேன்.
3) மேல் நிலை வகுப்புக்கு மாடுகளை விற்றேன்.
4) உன் சுற்றுலாச் செலவுக்கு நான் சுற்றியிருந்த பொருள்களை விற்றேன்.
5) பயணச் செலவுக்கு பல சமயம் பசியை விற்றேன்.
6) தேர்வு நாட்களில் உனக்கு தேநீர் கொடுக்க என் தூக்கத்தை விற்றேன்
7) கடைசியில் கல்லூரிப் படிப்புக்கு ஈட்டில வீட்டை விற்றேன்.

படித்தாய், உயர்ந்தாய், வளர்ந்தாய், வாங்கினாய் மீண்டும் எல்லாவற்றையும்.
இன்று நீ இருப்பது மூன்றடுக்கு இல்லத்தில்
நான் இருப்பது முதியோர் இல்லத்தில்
எல்லாம் விற்றும் என்னிடம் இருந்தது இதயம்.
சில பெற்றோரின் உள்ளக் குமுறல் இது.

பெற்றோரை தந்ததற்காக இறைவனிடம் நன்றி கூறவேண்டும். பெற்றோருக்கு எவ்வளவு செய்தாலும் நமது கடன் தீராது. நமக்காக தங்கள் உயிரைக்கூட கொடுக்கத் தயாராக உள்ள பெற்றோரை நினைத்திடுவோம். அவர்களை அன்பு செய்வோம். அவர்கள் தெய்வங்கள்.

- மரியதாஸ் விக்டோரியா

சிந்திக்க ஓர் சித்திரம்



'புழு' நடனம்?

பண்டிகைக் காலம் ஆரம்பமாகி விட்டது. பாடசாலைகள், முன்பள்ளிகள், நிறுவனங்கள் என ஒளிவிழாக்கள் களைகட்டத் தொடங்கி விட்டன. பங்குகளில் ஒளிவிழா ஆயத்தங்கள் ஆரவாரத்துடன் ஆரம்பித்திருக்கும். எங்கும் ஆடல் பாடல் கொண்டாட்டம் தான்.

இத்தகைய நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக, சிறப்பு விருந்தினராக, ஆசிச் செய்தி வழங்குபவராக என அழைப்புக்கள் பலதும் அருட்பணியாளர்களது மேசையை நிரப்பும். அண்மைக்காலமாக இத்தகைய "பாக்கியம்" அடியேன் எனக்கும் கிட்டி வருகிறது. இடுப்பொடிய மணித்தியாலக் கணக்காக அமர்ந்திருந்து சீனியையும், எண்ணெயையும், மாப்பொருளையும் உட்கொண்டு (அடுத்த முறை வைத்தியரை சந்திக்கும் நாட்களை எண்ணிப் பயந்தவாறே) இருக்கும் போது மனதில் உதித்த சிந்தனை தான் இம்முறைக்கான சாமக் காவலனின் குரல்.

நிகழ்ச்சிகளை அவதானித்ததில் அவற்றில் பெரும்பாலானவை பின்னணியில் பாடல்களை இசைக்கவிட்டு (இந்தி, ஆங்கிலம், சிங்களம் அவ்வப்போது தமிழ்) மாணவர்கள் நடனம் என்ற பெயரில் நிகழ்த்தும் உடல் அசைவுகளாகத் தான் காணப்படுகின்றன. (இத்தகைய நடனங்களை ஒரு மூத்த குருவானவர் ஒருவர் "புழு" நடனங்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்) சாஸ்திர மற்றும் பாரம் பரிய நடன வகைகளைக் காண்பது அரிது. பெரும்பாலானவை தற்போதைய சினிமாக்களின் நடனத் தாக்கத்துகுட்பட்ட அசைவுகளாகவே காணப் பட்டன. இவை தவிர மாணவர்களின் புத்தாக்க திறமையையோ, கற்பனை ஆற்றலையோ, கருத் தாக்கத்தையோ, அர்ப்பணத்தையோ அதிகரிக்க உதவும் நிகழ்வுகள் அரிதாகவே காணப்படுகின்றன.

மழலைகள் தமது மழலை மொழியில் சொல்லும் ஆத்திசூடியையோ, கொன்றை வேந்த னையோ கேட்கக் கிடைப்பதில்லை. அபிநயப் பாடல்கள், வில்லுப்பாட்டுகள், கவியரங்கங்கள், நாடகங்கள் அருகி வருகின்றன. முக்கியமாக இறைவார்த்தைப் பகுதியை மனனம் செய்து ஒப்புவித்தல், பேச்சுக்களை நடாத்துதல் என்பவற்றையும் போதியளவு காண முடியவில்லை.

எமது ஆசிரியர்கள், மறையாசிரியர்கள் இவர்களது இரசனை மட்டம் எங்கு செல்கிறது? மேற்பார்வை செய்யும் துறவிகள், குருக்கள் என்ன விதமான வழிப்படுத்தலை செய்கிறார்கள்? இக்கேள்விகள் நாம் சிந்திக்க வேண்டிய விடயங்கள் என்றே கருதுகிறேன்.

பங்கு ஒளிவிழா ஆயத்தங்கள் இப்போது தான் களைகட்டத் தொடங்கியிருக்கும். ஆற்றோடு அள்ளுப்பட்டு செல்வது செத்த மீன்கள் தான். உயிருள்ள மீன்கள் தாம் செல்ல விரும்பும் திசையில் பயணிக்கும். பிள்ளைகளின் திறமைகளையும், எங்கள் பண்பாட்டுக் கோலங்களையும் பேணி வளர்க்கும் விளைநிலங்களாக எமது நிகழ்வுகளை மாற்றுவோமா?

அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்

எதற்காக பாரபட்சம்

அது ஒரு கிராமப் பகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புக்கள் வரை உள்ள பாடசாலை. அப்பாடசாலையில் பணக் கார, ஏழைக் குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகள் கல்வி கற்று வருகிறார்கள். அந்தப் பாடசாலையில் 55 வயதான பற்றிக் ஆசிரியர் 11 ஆம் வகுப்பிற்கான கணித பாட ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

அப்பாடசாலையில் புதிதாக நியமனம் பெற்ற 30 வயதான அலெக்ஸ் விஞ்ஞான பாடத்திற்காக ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். பற்றிக் ஆசிரி யர் கணித பாடம் கற்பிக்கும் அதேநேரத்தில் அடுத்த வகுப்பில் அலெக்ஸ் விஞ்ஞான பாடம் கற்பித்தார்.

அந்த நேரத்தில் பற்றிக் ஆசிரியரின் நடவடிக்கைகளை அலெக்ஸ் அவ தானிப்பார். ஏன் இந்த ஆசிரியர் இப்படியான பாரபட்சமான மனோ நிலையில் நடந்து கொள்கிறார்? அனுபவமிக்க ஆசிரியரான இவருக் குத் தனது செயற்பாடுகள் நியாய மற்றதாக ஏன் புரியவில்லை? என அலெக்ஸ் மனதுக்குள் ஆதங் கப்பட்டுக்கொண்டிருந்தார்.

ஒரு நாள் பற்றிக் ஆசிரியர் பாடசாலை நூலகத்திற்குள் தனி யாக அமர்ந்திருந்து புத்தகம் ஒன் றைப் புரட்டி வாசித்துக் கொண்டிருந் ததை அவதானித்த அலெக்ஸ் ஆசிரியர் தனது மன ஆதங்கத்தை தீர்த்துக்கொள்ள நூலகத்திற்குள் நுழைந்து, "சேர் உங்களுடன் ஒரு விடயம் பற்றிக் கதைக்க வேண்டும். இப்பொழுது கதைக்க நேரமிருக்குமா?" என்று கூறி பற்றிக் ஆசிரியரின் முகத்தை நோக்கினார்.

புத்தகத்தில் மூழ்கியிருந்த பற்றிக் ஆசிரியர் அதிலிருந்து மீண் டெழுந்து தனக்கு முன்பாக இருந்த நாற்காலியைக் காட்டி, "இதில் உட் காருங்கள் அலெக்ஸ் தாராளமாகக் கதைக்கலாம்" என்றார்.

"சேர் உங்கள் வகுப்பில் பணக்கார, ஏழை வீட்டு மாண வர்கள் கற்கிறார்கள். ஆனால் நீங்கள் எந்தவொரு கற்பித்தல் சிறு விடயத்திலும் ஏழை மாண வர்கள் தவறு விடும்போது மட்டும் கடுமையாகக் கண்டிக்கிறீர்கள். இது ஒரு பாரபட்சமான நட வடிக்கை என்பது உங்களுக்குத் தெரியவில்லையா" என்று கேட் டார்.

"அதில் என்ன தவறு இருக்கிறது அலக்ஸ்? பணக்கார வீட்டு மாணவர்கள் பாடசாலை முடிந்ததும் மாலை வேளைகளில் நகர்ப்புறம் சென்று தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்கிறார் கள். ஆனால் வசதியற்ற ஏழை மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்ல முடி யுமா? அவர்கள் முழுமையாக என்னை நம்பியிருக்கிறார்கள். அவர்கள் பரீட்சையில் சித்தியடைந் தால் தான் எதிர்காலத்தில் ஒரு உயர்ந்த நிலையை அடைய முடியும். அதனால் தான் கணித பாடம் கற்பிக்கின்ற போது ஏழை மாணவர்களுடன் கண்டிப்போடு நடந்து கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலையில் நான் பாரபட்சம் பார்ப்பது தப்பில்லை என்று கூறி னார். பற்றிக் ஆசிரியருக்கு சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருது கொடுத்ததில் தப்பில்லை என மனதிற்குள் நினைத்தபடி தெளிவு பெற்ற மன நிறைவோடு அலெக்ஸ் ஆசிரியர் நூலகத்திலி ருந்து வெளியேறினார்.

க.அருள்நேசன்
குருநகர்

காவலன் கலசம்

"UBUNTU" - (உபுந்து)

"UBUNTU" (உபுந்து) என்பது ஓர் இயக்க முறைமை. (Oprating System) இது எவ்வாறு எங்கிருந்து வந்தது என்பதும் ubuntu எமக்குச் சொல்லும் செய்தி என்ன என்பதும் மிகவும் சுவாரஸ்யமானது. காலத்தின் தேவை அறிதலும், அறநெறியின் மிகவும் பிரதான செயற்பாடு. எனவே தான் காலத்தின் தேவை அறிந்து இக்கட்டுரையை நான் எழுதுகிறேன்.

ஒரு முறை மானிடவியலாளர்கள் சிலர் குறித்த ஆபிரிக்கப் பழங்குடி மக்களின் வாழ்வியல் பற்றிய ஆய்வு ஒன்றை நடாத்தினர். அவ்வாய்வின் நாட்களில் ஒரு நாள் அப்பகுதியில் உள்ள சிறுவர்களை அழைத்து, அவர்களுக்கு ஓர் ஓட்டப்பந்தையும் வைத்தார்கள். குறிப்பிட்ட ஒரு தூரத்தில் ஒரு கூடை நிறைய சுவையான பழங்களை வைத்து, பந்தையத்தில் யார் முதலில் ஓடிச் சென்று அக் கூடையைக் கைப்பற்றுகிறார்களோ அவர்களுக்கே அதிலுள்ள அனைத்துப் பழங்களும் உரியன, என்று நிபந்தனை விதித்தனர். பந்தயம் ஆரம்பமானது. அவர்களும் ஓடத்தொடங்கினார்கள். என்ன ஆச்சரியம் அவர்கள் தனித்தனியே ஓடவில்லை. மாறாகத் தங்கள் கரங்களைக் கோர்த்துக் கொண்டு ஒருமித்து ஓடினார்கள். ஒன்றாகவே கூடையை அடைந்தார்கள், ஒன்றாகப் பகிர்ந்து பழங்களை உண்டார்கள்.

அம்மானிடவியலாளர்கள், ஏன் அவ்வாறு செய்தீர்கள் என்று வினா எழுப்பியபோது, அவர்களுக்குக் கிடைத்த பதில்தான் "UBUNTU": "நாங்கள் இருக்கின்றோம், அதனால் நான் இருக்கின்றேன்." (I am because we are) இதை எளிதுபடுத்திக் கூறுவதானால், நீங்கள் இல்லை என்றால் நான் இல்லை என்னும் குழும உணர்வே "UBUNTU".

இன்று பொதுவாகவே மனிதர் எம் மத்தியில் இந்தக் குழும உணர்வு குறைந்து விட்டது. பறவைகளும் விலங்குகளும் தான் இன்னமும் குழுமங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. "கூட்டு வாழ்க்கை இன்னும் கலையாமல் இருப்பது காட்டுக்குள் தான்" என்று கவிப் பேரரசு வைரமுத்து சொன்னது சரியாகத்தான் இருக்கிறது. எம்மையே நாங்கள் அந்நியப்படுத்தப் பழகிவிட்டோம். இது எம் தமிழ் சமூகத்திற்கு மிகவும் பொருந்தும்.

"எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக
தந்தையே நீர் என்னுள்ளும்
நான் உம்முள்ளும் இருப்பதுபோல்
அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக"

(யோவான் 17-21)

நாங்கள் பிணக் காடுகளுடே நடந்து வந்த சமூகம், காயங்களும், வலிகளும் சுமந்து வந்த சமூகம். எனவே இழப்புக்கள், காயங்கள், வலிகள், தோல்விகளை நன்றாகவே அனுபவித்தவர்கள். ஆனால்நாங்கள்எங்கள்இழப்புக்கள்மீதும், தோல்விகள் மீதும் ஏறி நின்று சிந்திக்கத் தவறிய சமூகம். குழுக்குழுக்களாக வாழுகின்றோம். ஆனால் இன்னமும் குழுமமாக வாழவும், கரங்கள்கோர்த்துப் பயணிக்கவும் பழகவில்லை.

முன்னாள் வரலாற்றுத்துறை விரிவுரையாளர் மு.திருநாவுக்கரசு தனது "இலங்கை அரசியல் யாப்பு" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ள சில விடயங்களை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

"'இரண்டு யூதன் ஒன்று சேர்ந்தால் மூன்று கட்சி அமைப்பான்' என்று ஒரு யூதப் பழமொழி உண்டு. ஆனால் அப்படிப்பட்ட யூதர்கள் தமக்கு ஏற்பட்ட பாரிய இனப்படுகொலை சவாலின் முன்னிலையில் அதிகம் ஐக்கியப்பட்டு, அதிகம் புத்திபூர்வமாக செயற்பட்டு, தம்மிடம் காணப்பட்ட அனைத்து வழங்களையும் ஒன்றுதிரட்டி ஒரு புதிய அரசை உருவாக்குவதில் வெற்றிபெற்றனர். அவர்கள் தமக்கிடையே நிலவிய பொறாமைகளையும், காழ்ப்புணர்வுகளையும், சிறுமனப் புத்திகளையும் ஒதுக்கித்தள்ளி விடுதலையை இலட்சியமாக்கி வெற்றி பெற்றனர்"

இன்று எம் அரசியல்வாதிகளுக்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையும், மாவீரர்களின் தியாகங்களும் ஓர் "அரசியல் ஊன்றுகோல்" நாங்கள் வெறுமனே வெளித்தோற்றங்களைப்பார்த்தே தீர்மானிக்கின்றோம். இரு வரிகளுக்கு இடையில் இருக்கும் அர்த்தங்களை புரிந்துகொள்ள இன்னமும் பழகவில்லை. மீண்டும் விரிவுரையாளர் மு.திருநாவுக்கரசின் இன்னுமொரு கூற்றைக் குறிப்பிட்டு நிறைவு செய்ய விரும்புகிறேன்.

"... முள்ளிவாய்க்காலின் இனப்படுகொலையும் பேரழிவும் ஏற்படுத்தியுள்ள சவாலை எதிர்கொள்ள தக்க தகுதியையும், திறமையையும் இனிமேலாவது காட்டத் தவறினால், ஈழத் தமிழினம் என்றொரு பண்பாட்டினம் புவிப்பரப்பிலிருந்து விடை பெற்று அருங்காட்சியகத்தில் வெறும் காட்சிப் பண்டமாய் குழிபுகுந்து

எங்கள் விடுதலைப் பயணம் ...

கானான் பற்றிய
கனவுகளோடுதான் பயணிக்கின்றோம்
இப்போதும்
பாலைவனத்தில் தான் நாங்கள்
எகிப்தின்
அடிமைச் சங்கிலி உடைந்தாலும்
அதன்
கொழுப்புப்படிந்த
இறைச்சிச் சட்டிகள் எங்கள்
நினைவுகளுடன்
ஒட்டிக்கிடக்கின்றன ...
அதனால் ...
காடையும் மன்னாவும்
கசப்பாக இருக்கின்றன ...
மோயிசன்களுக்கு எதிராய்
முணுமுணுப்புக்கள்
பொன் கன்றுக்குட்டிகளுக்கு
புகழ் பாடல்கள்...
அதோ ...
சாம்பல் மோட்டல்
சரிந்து கிடக்கின்றன
எங்கள் கனவுகள் ..
கானானைக் காணுமுன்பே
மோயிசன்
கண்மூடிக்கொண்டார்
இருப்பினும் ...
தொடர்கிறது விடுதலைப் பயணம்...

அருட்பணி : T ரவிராஜ்

குடும்பம் ஒரு கோவில்!

'குடும்பம் ஒரு கோவில்', 'குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை'. 'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்' என்றெல்லாம் சொல்லி குடும்பத்தின் மேன்மையை எடுத்தியம்புவார்கள். நல்ல குடும்பங்களே நற் குழந்தைகளை, நல் இளைஞர்களை உருவாக்கும் பாசறைகளாக விளங்குகின்றன.

"என் உள்ளம் ஞானத்தைத் தேடி அலைந்தது. இதனால் நான் நல்லதொரு சொத்தைப் பெற்றுக்கொண்டேன். ஆண்டவர் எனக்கு நாவைப் பரிசாகக் கொடுத்தார். அதைக் கொண்டு அவரை நான் புகழ்வேன். நற்பயிற்சி பெறாதோரே, என் அருகே வாருங்கள். நற்பயிற்சியின் இல்லத்தில் தங்குங்கள். ஞானத்தின் நுகத்தை தலைதாழ்த்தி ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் கழுத்துக்களை வளைந்து கொடுங்கள். உங்கள் உள்ளம் நற்பயிற்சி பெறுவதாக. மிகுந்த பொருள் கொடுத்து நற்பயிற்சியைப் பெற்றுக் கொள்ளுங்கள். அதனால் பெருஞ் செல்வத்தை அடைந்து கொள்வீர்கள்" (சீராக்கின் ஞானம் 51:21-23, 26, 28).

"படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். இதனால் கணவன் தன் தாய், தந்தையை விட்டுத் தனது மனைவியுடன் ஒன்றித்திருப்பான்.

இரு வரும் ஒரேயுடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல. ஒரே உடல். எனவே, இறைவன் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்! "(மாற்கு 10:6:9). இவ்வாறு இயேசு, ஒருமை, கட்டவிழாமை ஆகிய பண்புகளை கத்தோலிக்க திருமணத்தின் இன்றியமை

இல்லறம் காப்போம்

யாப் பண்புகளாக வலியுறுத்துகின்றார்.

மேலும், கணவன், மனைவி ஆகிய இருவரும் ஒருவர் ஒருவரை அன்பு செய்தல், அன்பின் விளைவாகப் பிறக்கும் பிள்ளைகளை பொறுப்புணர்வோடு வளர்த்தெடுத்தல் ஆகிய கடமைகளை நிறைவேற்றக் கடமைப்பாடு உடையவர்களாகின்றார்கள்.

ஏகம், தூய்மை, கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம் ஆகிய நாற்பண்புகளைக் கொண்டு திருச்சபை காணப்படுவதுபோல, குடும்பமும் மேற்படி நாற்பண்புகளை தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்குகின்றது. பிள்ளைகளுக்கு இலவசமாய் நற்பயிற்சி வழங்கும் இல்லமாய் குடும்பம் துலங்கவேண்டும். பெற்றோர் எதைக் கொடுக்கின்றார்களோ அதையே பிள்ளைகள் பெற்றுக் கொள்கின்றார்கள்.

'முப்பத்தொரு நாட்களில் முரட்டுத் தனமான குழந்தையைக் குணப்படுத்துவது எப்படி? என்ற ஆங்கில நூலிலிருந்து:

ஓர் இளம் தாய்க்கு இரு குழந்தைகள். சிறுவனுக்கு ஐந்து வயது. சிறுமிக்கு இரண்டு வயது. சிறுவனின் துடியாட்டத்தைத் தாங்கமுடியாத தாய் ஒரு சீமியரை நாடினார். உடனே. சீமியர் சிறுவனை விளையாட அனுப்பிவிட்டு, பெண்ணோடு பேச ஆரம்பித்தார். அவர் தனது உள்ளக்கிடக்கைகளை ஒழிவு மறைவின்றி வெளிப்படுத்தி, தனது மகனின் குறும்புத்தனத்தைப் பொறுக்க முடியாதிருப்பதை ஒப்புக்கொண்டார். சீமியர் சில புதிய அணுகு முறைகளை முன்வைத்தார். அதாவது,

1. பிள்ளையின் நடவடிக்கைகளை நேர் முறையில் அவதானித்தல்.
2. அவை பற்றிய விபரணங்களைத் துல்லியமாகக் குறிப்பேட்டில் எழுதுதல்.
3. மாலை ஆறு மணிக்கு நாள்தோறும் குறிப்பேட்டின் உதவியோடு தாயும் மகனும் தனித்திருந்து சல்லாபித்தல்.
4. நல்ல செயற்பாடுகளை மட்டுமே எடுத்தி யம்பி, பாராட்டி, பரிசளித்தல்.

இவ்வாறு நாள்தோறும் செயற்பட்டு வந்தபொழுது, தாயினது கத்திக் குழறுதல், கோபத்தோடு தகாத வார்த்தைகளை வெளிப்படுத்தல், வன்முறையான தொடர் பாடல் போன்றவை அருகிப்போக, மகனும் சாதாரணமான முறையில் நேரிய செயற்பாடுகளுக்கு இயைபாக்கம் பெற்றநிலையில் தேர்ச்சிபெற்றவனாய் காணப்பட்டான்.

'நல்ல பிள்ளை' என எல்லோராலும் பாராட்டுதல் பெற்றான். மூன்று வாரங்களின் பின்னர் நடந்த நிகழ்வு. மதிய சாப்பாட்டை இரு பிள்ளைகளுக்கும் வழங்கியபின்னர் தொலைபேசி மணி அடிக்கத் தாய் எழுந்து போய் தொலைபேசியோடு தொடர்பு கொண்டார். அவ்வேளை சிறுமி சாப்பிடாது அழத்தொடங்கினாள்.

உடனே சிறுவன் தனது சாப்பாட்டை மூடிவைத்துவிட்டு, சிறு மிக்கு சோறு ஊட்டினான். "அச்சாப் பிள்ளை, தங்கா சாப்பிடுங்க" என்று செல்லமாகச் சொல்லி, சோறு உண்ணவைத்தான்.

இதனை அவதானித்த தாய், தனது மகனின் விரைவான வளர்ச்சியை முன்னிட்டு புளகாங்கிதம் அடைந்தார்.

அருட்பணி வின்சன் பற்றிக் (அமதி)

சிரி.. சிந்தி..

தினமும் ஒரு வீட்டில் குடும்ப செபமாலை நடைபெறுவது வழக்கம். அக்குடும்பத்தில் பெற்றோருடன் இணைந்து மூன்று பிள்ளைகளும் செபமாலை ஓதி வருவது வழக்கம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணிக்கத்தை ஓதி வந்தனர். கடைசி மகனுக்கு முதலாவது காரணிக்கம் வழங்கப்பட்டது. அவனுக்கு சோம்பல் அதிகம் இருந்ததால் தனது காரணிக்கம் முடிந்ததும் உடனே உறங்கி விடுவான். இதை அவதானித்த பெற்றோர் அவனுக்கு ஐந்தாவது காரணிக்கத்தை வழங்கினார்கள். அவன் முதல் நான்கு காரணிக்கங்களுக்கும் நன்றாக உறங்கிவிட்டு, ஐந்தாவது காரணிக்கத்திற்கு எழுந்து தனது காரணிக்கத்தைச் சொல்லுவான். இத்தனைக்கும் இந்தச் சோம்பல் தனமுடைய மகனின் பெயர் செபமாலை தாசன்.

தவம் குருசுமுத்து - நவாலி

(வாகனம் சென்று கொண்டிருந்தது. வீதியில் சனக்கூட்டம் அதிகமாக இருந்தது. அருட்தந்தை சாரதியிடம்...)

அருட்தந்தை : - டேவிற் யார் இறந்தது? சனம் கும்பலாக நிற்குதே.
டேவிட் :- இறந்தது பாதர் இராயப்பரின் மாமியாராக இருக்கவேணும்.
அருட்தந்தை : - அப்படியா? எப்படி இது உனக்குத் தெரியும்?
டேவிட் :- போன கிழமைதானே பாதர் நீங்கள் நற்செய்தி வாசிக்கும்போது இராயப்பரின் மாமி காய்ச்சலாக் கிடந்தார் என்று வாசித்தீர்கள்.

காவலன் கலசம்

ஈழத்துக் கத்தோலிக்க கலை இலக்கியத்திற்கு முகவரி தந்த மரியசேவியர் அடிகள்



ஈழத்தின் கலை இலக்கியப் புலத்திலும், கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியத் திலும் தனது பணிகளினாலும், கலை ஆளுமையினாலும் முதன்மைப்படுத்தப்படுபவர் அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள். கடந்த 55 ஆண்டுகளாக கலை இலக்கியத் துறைகளோடும், சமூகப்பணிகளோடும் தன்னைக் கரைத்துக் கொண்டிருப்பவர். இனம், மதம், மொழி கடந்த மனிதம் என்ற உயரிய சிந்தனையை வாழ்வாக்கிக் கொண்டவர், திருமறைக் கலாமன்றம் என்ற கலாசார நிறுவனத்தினை உருவாக்கி அதனூடாக இன்று வரையும் நாடு தழுவியும், நாடு கடந்தும் பணியாற்றிக் கொண்டிருப்பவர். அம்மன்றத்தினூடக உருவாக்கம் பெற்ற பல படைப்பாளிகள் இன்று உலகம் முழுவதும் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஈழத்திலே யுத்தம் கொழுந்துவிட்டெரிந்த காலத்தில் தனித்து நின்று கலைசெய்து கலையினூடாகத் தமிழ் இனத்தின் துயரங்களை உலகறிய செய்ததுடன் துயருற்ற மக்களுக்கான கலைவழி ஆற்றுப்படுத்தலையும் செய்தவர். இத்தகைய சிறப்புக்குரிய கலைக் குருவாகிய மரியசேவியர் அடிகளார் பற்றிய அறிமுகக் கட்டுரையை பிரசுரிப்பதில் கலைக்காவலன் மகிழ்வடைகின்றது.

காவலூர் யோவான்

தொடக்கமும் தூண்டுதலும்

மரியசேவியர் அடிகள் 1939 ஆம் அண்டு இளவாலையில் பிறந்தார். கலைப்பூமியாகிய இளவாலையில் பாலப்பருவத்தில் இருந்தே கூத்து, கோவில், பாடகர் குழாம் என தனது கலை ஆர்வத்தினை வளர்த்துக்கொண்டவர். சிறிய குருமடத்தில் இருந்தபோது அங்கு பியானோ இசைக்கவும், பாடகர் குழுவுக்கு தலைமை தாங்கவும் என ஆரம்பித்த இவரது கலை இலக்கிய பணி அம்பிற்றியா பெரிய குருமடத்தில் அமரர்களான அருட்திரு மைக்கேல் றொட்றிக்கோ, அருட்திரு இராயப்பு போன்ற அருட் தந்தையர்களால் ஊக்கமளிக்கப்பட்டு தொடரப்பட்டது.

உரோமாபுரியில் இறையியல் பல் கலைக்கழகத்தில் கற்கின்ற காலத்தில் பலமொழி பேசுவோரோடும், பலநாட்டுக் கலாசார உறவுகளோடும் கல்வி கற்று 22 வயதில் அதாவது குறைந்த வயதில் பாப்பரசரின் விசேட அனுமதியுடன் குருப்பட்டம் பெற்று விசேட அனுபவங்களோடு இங்கு குருவாக வந்து பணியேற்றவர். கலையை தனது பணிகளுக்கான ஆயுதமாக பயன் படுத்தத்தொடங்கினார். முன்னாள் ஆயர்களான எமிலியானுஸ்பிள்ளை, தியோகுப் பிள்ளை ஆண்டகைகளின் ஆதரவும் தட்டிக்கொடுத்தல்களும் அவரது பணிகளை விரிவடையச் செய்தன.

திருமறைக் கலாமன்றத்தின் தாபகர்

1963 ஆம் ஆண்டில் இருந்தே கலைச்செயற்பாடுகளை ஆற்றத் தொடங்கிய மரியசேவியர் அடிகள் திருமறைக்கலாமன்றம் என்னும் அமைப்பினை 1965 ஆண்டு ஆரம்பித்து இன்று வரைக்கும் அதன் இயக்குநராக இருந்துபணியாற்றிக்கொண்டிருப்பவர். ஆரம்பத்தில் தனியே திருப்பாடுகளின் காட்சிகளையும், நாடகங்களையும் மட்டும் நிகழ்த்தும் நிறுவனமாக உருவாக்கி 1988 ஆம் ஆண்டில் இருந்து இன மத மொழி கடந்தியங்கும் கலாசார மையமாக (Centre For Performing Arts) பல்வேறுபட்ட பணிகளை ஆற்றி வரும் நிறுவனமாக இதனை வளர்த்தெடுத்தார்.

மரபுவழிக் கலைகளான கூத்து, இசைநாடகம், கிராமியக்கலைகள் என்பவற்றினைப்பேணும் நடபடிக்கைகள், மரபுவழி நவீன நாடகங்கள் எனப் பல்வகை நாடகங்களையும்மேடையேற்றுதல், இளையோரை நுண்கலைகளில் பயிற்றுவிப்பதற்கான கலைத்தூது அழகியல் கல்லூரி, நாடகப் பயிலகம், சிறுவர் கலைக்கூடம், ஓவியக்கலை வட்டம் எனப் பல்வேறு பிரிவுகளை உருவாக்கி எதிர்காலத்தின் கலை ஆளுமைகளை உருவாக்கும் பணிகளை ஆற்றி வருகின்றார்.

மன்றத்தில் உருவாகிய பல இளைஞர்கள் இன்று உலகம் முழுவதும் பல்வேறு இடங்களிலும் சாதனை புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் வேறு எந்த நிறுவனமும் அரங்கேற்றாத அளவுக்கு முன்னூறுக்கும் மேற்பட்ட நாடகங்களை திருமறைக் கலாமன்றம் அரங்கேற்றியுள்ளது. அதுமட்டுமன்றி தமிழ்விழா, இலக்கிய விழா, நாட்டுக்கூத்துவிழா, இசைநாடக விழா, கிராமிய கலைவிழா, இசைவிழா, நாடகவிழா எனப் பல்வேறு விழாக்களை காலத்துக்குக்காலம் நிகழ்த்தி எமது பண்பாட்டின் பெறுமானங்கள் யுத்தகாலத்திலும் அழிந்து போகாத வகையில் அவற்றிற்கு எழுச்சியை ஏற்படுத்தியுள்ளார்.

அதுமட்டுமன்றி இலங்கையில் 20 பிராந்திய மன்றங்களை அமைத்து இலங்கை முழுவதும் இப்பணியினை தொடர்ந்து ஆற்றி வருகின்றார். இன்று திருமறைக் கலாமன்றம் கத்தோலிக்க கலை இலக்கியத்தின் மையமாகவும் அதேவேளை தமிழ்க்கலைகளின் மையமாகவும் நின்று பணியாற்றி வருகின்றது.

திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியம்

கிறிஸ்தவர்களின் தவக்காலத் தினையொட்டிய கலை மரபாகிய திருப்பாடுகளின் நாடக மரபானது உடக்குப் பாஸ் என்னும் பொம்மை நாடக மரபில் இருந்து 1954 இல் முதன் முதலாக அருட்திரு லோங் அடிகளாரின் முயற்சியினால் மனிதர்கள் நடிக்கும் நாடக மரபாக ஆரம்பமாகிய முயற்சி, மொழிபெயர்ப்பு நாடகங்களாக இருந்த மரபினை மாற்றி தமிழில் முதன் முதலாக தமிழுக்குரிய வகையில் இதனை எழுதி மரிசேவியர் அடிகளே மேடையேற்றத் தொடங்கினார். அதனைப் படிப்படியாக வளர்த்து 'பாஸ் என்றால் அது சவிரிமுத்து சுவாமியின்ர பாஸ்தான்' என்று மக்கள் கூறுமளவுக்கு அம்மரபுக்கு முகவரி அமைத்ததுடன் பல்வேறு பரீட்சார்த்த நாடகங்களை உருவாக்கினார். கல்வாரியில் கடவுள், அன்பில் மலர்ந் அமரகாவியம், பலிக்களம், கடவுள் வடித்த கண்ணீர், காவிய நாயகன், வேள்வித் திருமகன் என இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பாடுகளின் நாடகங்களை எழுதினார். அத்துடன் நடிப்பு, காட்சி, விதானிப்பு, இசை, ஒலிஒளி என ஒவ்வொரு துறையிலும் கவனம் செலுத்தி இன்று உலகத்தரம் வாய்ந்த மரபாக இதனை வளர்த்தெடுத்திருப்பது மட்டுமன்றி இதனை தொடர்ந்து நிகழ்த்தத்தக்க கலைப் பரம்பரையையும் தோற்றிவித்துள்ளார்.

சமாதானத்துக்கான கலை முயற்சிகள்

தொண்ணூறுகளில் யுத்தம் முனைப்பு பெற்ற காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினையை தென்பகுதியில் யாரும் பேசமுடியாத காலத்தில் வார்தைகளற்ற நாடக மரபினை உருவாக்கி தமிழ் மக்கள் எதிர்கொண்ட யுத்த அவலங்களை தலைநகரில் வெளிப்படுத்தியது மட்டுமன்றி, "கலை என்ற தளத்தில் எல்லா மனிதர்களையும் சந்திக்கச் செய்யமுடியும்" என்ற கொள்கையுடன் சமாதானத்துக்கான பல்வேறு முயற்சிகளை கலைஞர்களைக் கொண்டு மேற்கொண்டார். பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரா, மிராண்டா ஹேமலதா, ஜெரோம் டி சில்வா, சோமலதாசு பசிங்கா எனப் புகழ்பெற்ற சிங்கள கலைஞர்களுடன் இணைந்து பல்வேறு அரங்க முயற்சிகளினூடாக சமாதானத்துக்கான பணிகளை ஆற்றி வந்துள்ளார். அதுமட்டுமன்றி தென்பகுதியில் 10 பிராந்தியங்களில் சிங்கள மக்கள் மத்தியில் மன்றங்களை உருவாக்கி அவர்களுடனான செயற்பாடுகளினூடாக பல்வேறு கலை இலக்கிய முயற்சிகளைமேற்கொண்டு வருகின்றார். இத்தகைய சமாதான முயற்சிகளுக்காகவே கடந்த வருடம் 'சமாதானத்துக்கும் நல்லெண்ணத்திற்குமான மீயுயர் விருதினை' இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா இவருக்கு வழங்கி கௌரவித்தார்.

வெளிநாட்டுக் கலைப் பயணங்கள்

புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழ்கின்ற எம்மவர்களை இணைத்து அங்கு கிளைகளை உருவாக்கி திருமறைக் கலாமன்றத்தின் பணிகளை அங்கும் ஆற்றி வருவதுடன் எம்மவர்களை சந்தித்து மண்ணின் உறவுகளையும் கலாசார வேர்களையும் புத்துயிர்ப்புச் செய்யும் வகையிலான பல்வேறு கலாசாரக் கலைப் பயணங்களை அசாத்திமான காலச்சூழல்களில் எல்லாம் பகீரதப் பிரயத்தனங்களின் மத்தியில் மேற்கொண்டு இங்கிருந்த எமது கலைஞர்களுக்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தி இதுவரை 19 தடவைகள் வெளிநாட்டுக் கலைப்பயணங்களை மேற்கொண்டார். இவரது கலைத் தூதுப் பயணங்களை மதித்து ஜேர்மன் அன்மீகப்பணியகம் இவருக்கு 'கலைத்தூது' என்ற பட்டத்தினை வழங்கி கௌரவித்தது.

அரங்கவியலாளன்

ஈழத்தின் முக்கிய நாடகவியலாளர்களிலொருவராக விளங்குகின்ற மரியசேவியர் அடிகள் நாடக ஆசிரியராக, நெறியாளராக, நாடகத் தயாரிப்பாளராக, அரங்கியல் ஆய்வாளனாக பல்வேறு தளங்களிலும் தடம் பதித்துள்ளார். குறிப்பாக பல்வேறு திருப்பாடுகளின் நாடகங்கள், விவிலிய நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள், நடன நாடகங்கள் எனப் பலவற்றையும் எழுதியுள்ளார். கத்தோலிக்க நாடக மரபு என்பது யாது என்ற அளவில் இவரது நாடகங்கள் முக்கியத்தவம் பெறுகின்றது. அதுமட்டுமன்றி ஈழத்தின் சிறந்த நெறியாளர்களிலொருவராக விளங்கும் இவர், தனக்கென சிறப்பான நெறியாக்கத்திறனைக் கொண்டிருந்தார். நேர்த்திமிக்க பல அரங்கத் தயாரிப்புக்கள் சர்வதேச தரத்தில் இவரால் படைக்கப்பட்டன. அவரைப் பின்பற்றிய மாணவ பரம்பரையொன்று திருமறைக் கலாமன்றத்தில் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இவர் எழுதிய 'கலை முகம்', 'அரங்கவலைகள்' போன்ற அரங்கியல் ஆய்வுக்கட்டுரைகள் முக்கியத்துவமுடையவை.

கல்விப்புலம்

சிறிய வயதில் இருந்தே கல்வியில் சிறந்து விளங்கிய இவர் இரட்டை வகுப்பேற்றங்களினால் குறைந்த வயதிலேயே தனது குருத்துவக்கல்வியை முடித்து 22 வயதில் பாப்பரசரின் விசேட அனுமதியுடன் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டது மட்டுமன்றி, உரோமைப் பல்கலைக்கழகத்தில் இறையியலில் கலைமாணி, முதுதத்துவமாணி கற்கைகளை தனது இள வயதிலேயே நிறைவு செய்தார். பின்னர் தமிழகத்தில் மதுரைத் தமிழ்ச்சாங்கத்தில் தமிழை சிறப்புப் பாடமாக பயின்று 'வித்துவான்', 'புலவர்' பட்டங்களைப் பெற்றார். தொடர்ந்து லண்டன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பெற்றார். A Catholic - Hindu Encounter என்ற பெயரில் கலாநிதிப் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்வு மிகமுக்கியத்துவமுடையதாக விளங்குகின்றது. பின்னர் ஜேர்மனியிலுள்ள பசாவு பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத் துறையில் மற்றொரு கலாநிதி பட்டத்தினை டச் மொழியிலே மேற்கொண்டார். இவை மட்டுமன்றி, தமிழ் ஆங்கில மொழிகளில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும் மொழியியல், இறையியல், தத்துவவியல், அரங்கியல் எனப் பல்வேறு துறைகளிலும் எழுதியுள்ளார். அதுமட்டுமன்றி ஆங்கிலம், சிங்களம், லத்தீன், இத்தாலியம், கிரேக்கம், எபிரேயம், ஜேர்மன், சமஸ்கிருதம் போன்ற மொழிகளை அறிந்தவராகவும், சில மொழிகளில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவராகவும் விளங்குகின்றார். இவரது பணிகளையும் ஆளுமையையும் மதித்து யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதி பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

கலையை ஊடகமாகக் கொண்டு இறைவன் தனக்குத் தந்த தாலந்துகளை எந்தளவு பயன்படுத்த முடியுமோ அந்தளவுக்குப் பயன்படுத்தி 'கலைவழி இறைபணி' என்ற தாரக மந்திரத்துடன் பணிசெய்யும் மரியசேவியர் அடிகளைப் பாராட்டுவதும், அவரது பணிகளைத்தொடர்வதும், அவரின்தொடர்பணிக்காக உடல் நலத்திற்காக வேண்டுவதும் எமது கடமையாகும்.

காவலன் கலசம்

யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

பின்னணி, தோற்றம், வளர்ச்சி

ஆயர் பெற்றக்கீனி குடா நாட்டில் இல்லாதபோது நடைபெற்ற நிகழ்வுகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி....)

மீண்டும் வாந்திபேதி நோய் 1854ம் ஆண்டின் பிற்பகுதியில் மீண்டு மொருமுறை யாழ்ப்பாணக் குடாநாட்டை கொலரா எனப்படும் வாந்திபேதி நோய் புரட்டியெடுத்தது. ஊர்காவற்றுறையில் மட டும் பலியானோரில் கத்தோலிக்கரின் எண் ணிக்கை 400-500 ஆகும். செமேரியா அடிகள் ஊர்காவற்றுறை நிலைமையைப் பற்றிக் குறிப்பிடும் போது இங்குள்ள துன்பி யல் நிலையை வார்த்தைகளால் விளக்க முடியாது என்று குறிப்பிட்டார். பலர் ஆல யத்தில் தஞ்சம் புகுந்தனர். விஸ்தாரினி, லெபெஸ்கோ, றூவ்வியாக் அடிகளுடன் செமேரியா அடிகளும் பாதிக்கப்பட்ட மக்க ளின் ஆன்மீக, உடல் தேவைகளைக் கவனித்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுடன் நெருங் கிப் பழகிப்பராமரித்து வந்த சில குருக் களும் நோய்த்தாக்கத்துக்குள்ளாகி இறந் தமை பற்றி முன்னர் பார்த்தோம். 1855ம் ஆண்டு ஜனவரியில் மாதகலில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பணியாற் றிக்கொண்டிருந்த லக்கோம் (Lacombe) அ.ம.தி. அடிகள் கொலரா தாக்கத்துக் குள்ளாகி இறக்கும் போது அவருக்கு வயது 28.

ஒரு விசேட ஏற்பாடாக 1855ம் ஆண்டு மார்ச் மாதம் அமல உற்பவ அன்னை மரியாள் பெயரில் ஒரு திரி தின வழிபாட்டை ஏற்பாடு செய்யும் படி செமேரியா அடிகள் பணித்தார். அதற்கு அவர் மூன்று காரணங்களை முன் வைத்தார். அவை

i. அதற்கு முதல் வருடம் (1854ல்) கன்னி மரியாளின் அமல உற்பவம் ஒரு விசுவாச சத்தியமாகப் பிரகடனப் படுத்தப்பட்டமையால் அன்னை மரியா ளைக் கனம் பண்ணுதல்.

ii. பாப்பரசரால் பிரகடனப்படுத்தபட்ட ஜுபிலி ஆண்டின் அருளைப்பெறுவதற்கு கிறிஸ்தவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுப்பது.

iii. மிக முக்கியமானதும் பொருத்த மானதுமான காரணம் - பெருமளவு மக்களின் உயிர்கொல்லி நோய்களாக விளங்கிய வாந்திபேதி மற்றும் அம்மை நோய்களின் தாக்கத்திலிருந்து விடுவிக்க கன்னிமரியாளின்பரிந்துரையைவேண்டு வதுமாகும்.

திரிதின ஆராதனை உணர்வு பூர்வமான மறையுரைகள், மாலை வழிபாடுகள், சிறப்புமிகு திருப்பலிகள், பவனிகளால் சிறப்பிக்கப்பட்டது. திரிதின ஆராதனையின் 3ம் நாள் சோனாவாரி யான மழை பொழிந்தும் பவனியை அது குழப்பவில்லை புரட்டஸ்தாந்து சகோதரர் கள் முதலாக ஏதோ ஒரு விதத்தில் இப் பக்தி முயற்சிகளில் கலந்து கொண்டனர்.

ஒரு வியத்தகு செயலாக திரிதின ஆராதனையின் நிறைவில் ஆட்கொல்லி நோயின் தாக்கம் திடீரென நின்று போனதெனலாம். எதுவித சந்தேகத்துக் கிடமின்றி நோயின் தாக்கம் திடீரென்று திரிதின ஆராதனையின் நிறைவில் இல் லாமல் போனமை ஒரு புதுமை ஏன்று செமேரியா அடிகள் உறுதியாக நம்பினார். திரிதின ஆராதனை முடிந்து முதல் நாளில் வாந்திபேதி நோய்க்குள்ளான 40 பேர் பூரணகுணமடைந்ததாகவும், படிப்படியாக யாழ் குடாநாடு முழுவதிலிருந்தும் வாந்தி பேதி நோய் முற்றாக நீங்கி விட்டதாக வும் அறிவிக்கப்பட்டது.

கோவாப் பிரிவினை - 2ம் கட்டம்

முன்னதாக யாழ் அடைக்கல மாதா ஆலயம் சம்பந்தமான நீதிமன்றத் தீர்ப்பு ஆயர் பெற்றக்கீனிக்குச் சார்பாக வழங்கப்பட்டமையை எதிர்த்து கோவா ஒரட்டோரியன் சபைக்குருவாகிய பிரான் செஸ்கோஜோவாவோ (Francisco Joao) அடிகள் செய்த மேன் முறையீடு கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தால் நிராக ரிக்கப்பட்டது. தங்கள் முயற்சிகள் பயனளிக்காததால் ஆலயத்திற்குள்ளேயே நிலை கொண்டு ஜோவாவோ அடிகளா ரும் அவரது ஆதரவாளர்களும் உட்பக்கத் தால் பூட்டி வைத்திருந்தார்கள். எனவே நீதிமன்ற பாதுகாப்பு அலுவலர்களின் உதவியுடன் செமேரியா அடிகளும் விஸ்தாரினி அடிகளும் வலுக்கட்டாய மாக ஆலயத்தைத் திறந்து பொறுப்பெடுத் துக் கொண்டார்கள்.

தம்மால் எதுவும் செய்ய முடியாது போனதையுணர்ந்த ஜோவாவோ அடி கள் தரப்பினர் ஆலய வளாகத்தில் தங்கி யிருக்கச் சில நாட்கள் தவணை கேட்டும் இந்நிலை நீடித்தால் கத்தோலிக்கர் மத்தியில் பெரும் இடறலும் குழப்பமும் ஏற்படும் என்று கருதப்பட்டதால் அவர்கள் வெளியேறுவதற்குச் சில மணித்தியாலங் கள் மட்டும் வழங்கப்பட்டன. பின்னர் ஆலயம் மூன்று வாரமளவில் பூட்டி வைக்கப்பட்டுப் பின் ஆகஸ்ட் 5ம் திகதி பனிமயமாதா திருநாளன்று ஆலயத் தைத் தூய்மைப்படுத்தும் சடங்கொன்று நடத்தப்பட்டு வழிபாட்டுக்குத் திறக்கப்பட் டது. இங்கு பிரச்சினை முடிவுக்கு வந் தாலும் குடாநாட்டின் வேறு இடங்களில் பிரச்சினைகள் கருக்கொள்ளத் தொடங் கியது.

அருட்பணி S.V.B.மங்களராஜா

இறுதிப் பயணம் யாருடன்?

இரவில் நிம்மதியாக தூங் கிக் கொண்டிருந்தார் இலாசர். திடீரென அவர் முன் தோன்றிய வானதூதர் அவரை நோக்கி இன்று நீ என்னுடன் சொர்க்கத்திற்கு வருகிறாய். உன்னுடன் யாரையாவது அழைத்து வர விரும்பி னால் அவர்களையும் அழைத்துவர உனக்கு அனுமதி தரப்பட்டுள்ளது. உனக்கு மிக வேண்டியவர்கள் யார்? உன் தாயா? மனைவியா? குழந்தைகளா? அல்லது நண்பர்களா? எனக் கேட்டார்.

இலாசர் சொன்னார் " என் நண் பர்கள் வேண்டாம். அவர்கள் இன்னும் பலகாலம் உலகில் வாழ்ந்து அனுபவிக் கட்டும். என் குழந்தைகள் இன்னும் அனுபவிக்க வேண்டியது நிறைய இருக் கிறது. என் மனைவியோ ஒரு நல்ல தாயாக இருந்து என் பிள்ளைகளைக் கவனிக்க வேண்டியிருப்பதால், அவர் களும் வேண்டாம்" என்று கூறினார். உடனே அந்த வானதூதர் இலா சரை நோக்கி "அப்படியானால் உன் தாயை அழைத்துச் செல்கிறாயா? ஏனெ னில் அவர்கள் உன்னைவிட அதிக காலம் உலகில் இருந்தாகிவிட்டது. உன் குழந்தைகளைக் கவனிக்க உன் மனைவி இருக்கிறார். உன் அம்மாவை அழைத்துச் செல்வோமா? என்று கேட் டார். இலாசர் அமைதியாகச் சொன்னார் "என் தாய், இந்த ஊரில் ஆசிரியராக இருக்கிறார். என்னை நரகத்திற்கு அழைக்காமல், சொர்க்கத்திற்கு நீங்கள் அழைப்பதற்கு என் தாயின் வளர்ப்பு முறையே காரணம். அவர்கள் இன்னும் சிறிது காலம் உலகில் இருந்தால், இன் னும் நிறையப் பிள்ளைகளை நல்லவர் களாக உருவாக்குவார்கள். எனவே, என் தாய் இங்கேயே இருக்கட்டும். என் தாய் இதுவரை எனக்குக் கற்றுத் தந்த நல்ல விடயங்களை மட்டும் எனக் குத் துணையாக என்னுடன் எடுத்துச் செல்ல அனுமதியுங்கள்" என்று கூறி முடித்தார் இலாசர்.

நன்றி: வத்திக்கான் வானொலி

புனிதர் நிக்கலஸ்

துருக்கியில் லிசியா அருகில் பத்தாரா நகரில் கி.பி. 280 இல் இறை பக்தியும், தாழ்ச்சியும், பிறரன்பும் நிறைந்த பெற் றோருக்கு ஒரே பிள்ளையாகப் பிறந்தார். குழந்தைப் பருவ முதல் புதன், வெள்ளிக் கிழமைகளில் மாலை ஒரு முறை மட்டுமே உணவு உட்கொள்வார்.

பெற்றோரினால் பக்தியிலேயே வளர்க்கப்பட்டார். பாட சாலை முடிந்தவுடன் மற்றப் பிள்ளைகள் விளையாடப் போகும் போது ஆலயம் சென்று பெரியோரிடம் இறைபக்தி தொடர்பாக அளவளாவி அதிகம் கற்றார். சிறுவுன் நீக்கிலஸ் அருகிலுள்ள துறவியர் இல்லத்திற்கு விரும்பிச் செல்வார். தந்தையின் சகோத ரர் துறவியர் இல்ல முதல்வர். தினமும் துறவிகளோடு வழிபாடு இறை மன்றாட்டு, வழிபாடு மன்றாட்டுகளில் பங்கேற்பார். கடவு ளுக்குப் பணி செய்யவும், இறைவனை வழிபடவும் பெற்றோர் மற்றும் துறவிகளான நண்பர்களிடம் கற்றுக்கொண்டார்.

பெற்றோரினால் உள்ளூர் ஆசிரியரிடம் சேர்க்கப்பட்டு பண்டைய கிரேக்க இலத்தீன் பாடங்களையும் பயின் றார். வேதாகமம், தத்துவம், இறையியலை துறவிகளிடம் பயின் றார். இவரது இளம் வயதி லேயே பெற்றோர் கொள்ளை நோயால் இறந்தனர். இத னால் இவர் துறவற சபை யின் குருமட முதல்வராக இருந்த தந்தையின் சகோத ரனின் பொறுப்பில் வாழ்ந்து வரலானார்.



மற்றத் துறவிகளுடன் சேர்ந்து தன் கல்வியிலும், விசுவாச வளர்ச்சியிலும் கட வுளை அன்பு செய்யவும் இறை வனுக்கு "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற நிலையில் பலருக்கும் பணி செய்து இன்புற்றார்.

பெற்றோர் இறந்தபொழுது நீக்கொலாய் அவர்களுக்கு ஞானமிகு செல்வத்தை விட்டுச் சென்றனர். நீக்கொலஸ்சின் தந்தையின் சகோதரர் தான் அந்த மறைமாவட்டத்தின் ஆயராக இருந்தார். (அவரன் பெயரும் நீக்கொவஸ் தான்) எனவே, ஆயர் அவர்களிடம் அனுமதி பெற்று தம் செல்வத்தை பசித்தோருக்கு உணவு, ஆடை இல்லாதவர்களுக்கு ஆடைகளை வாங்கி அளித்தார். அநாதைகள் கைம்பெண்கள் அனைவரையும் காப்பாற்றினார்.

பத்தாராவில் ஒரு செல்வந்தருக்கு மூன்று அழகான இளம் பெண்கள், திடீரெனத் தம் செல்வம் முழுவதை யும் இழந்து வறுமைக்கு ஆட்பட்டபின் வறுமை நிலை அடைந்த பெண்களின் தந்தை தன் பிள்ளைகள் மூவரையும் தவறாக வழிநடத்தி பணம் சம்பாதிக்க எண் ணினார். இதையறிந்த இறைவன் கனவில் தோன்றி நீக்கொலஸ் அவர்க ளிடம் மூன்று பெண்களையும் காப் பாற்ற வேண்டும் என வேண்டினார்.

ஓர் இரவு 300 பொற்காசுகளை கைக்குட்டையில் எடுத்துச் சென்று அம் மனிதரின் வீட்டு வாசலில் வைத்து விட்டுப் புனிதர் சென்று விட்டார். காலை யில் வீட்டு வாசலில் பணம் வைத்தது யாரென்று தெரியாது மூத்த மகளிற்கு சிறப்பாகத் திருமணம் செய்து வைத்தார். சில நாட்கள் செல்ல தன் இரண்டாவது மகளுக்கும் காலையில் வீட்டு வாசலில் இருந்த பணத்தை எடுத்துத் திருணம் செய்து வைத்தான். தனக்கு இவ்வாறு பணம் தந்து உதவியவரை காட்டுமாறு கடவுளிடம் வேண்டினான்.

மூன்றாவது மகளின் திருணத்திற்கு பணத்தை வைக்கும் பொழுது கதவு திறந்தது. தந்தையும் மகளும் வந்து பார்த்தபொழுது புனித நீக்கிலஸ் நின்றார். அவருடைய செய லுக்கு தந்தையும் மகளும் இறைவனுக்கு நன்றி கூறியதுடன், புனிதருக்கும் தம் நன்றியைத் தெரிவித்தனர்.

சில நாட்களின் பின் இயேசுவின் கல்லறையைத் தேட விரும்பி ஜெருசலேம் செல்ல விரும்பினார். எனினும் பெரும் புயல் ஏற்படும் எனப் புனிதர் இரவு கனவு கண்டார். கனவின் படி பெரும் புயல் தோன்றியது. அஞ்சாதீர்கள் எனப் புயல் தணியும்படி இறைவன் அருள்புரிந்தார். கடவுள் புனிதரின் வேண்டுதலை ஏற்றுப் புயலை அடக்கினார்.

புனிதரின் அற்புத செயல்கள் மக்களிடையே விரைவில் பரவியது. பல நோயாளிகள் புனிதரினால் குணம் பெற்றனர். புனிதரின் அற்புதங்களைக் கேட்டு மக்கள் அதிசயம் அடைந்தனர். பத்தாரா அருகில் உள்ள வைரா என்ற நகரின் ஆயர் திடீரென இறந்து விட்டார். புதிய ஆயரைத் தெரிவு செய்யப் பல குருக்கள் கூட்டம் கூடினர். அன்றிரவு முக்கியமான குருவுக்கு வானதூதர் தோன்றி புதிய ஆயர் நீக்கிலொய் என்றும் அறிவித்தார்.

கிறிஸ்மஸ் காலங்களில் எந்த எந்தக் குழந்தைகளுக்கு உடை, உணவுப் பொருட்கள் வேண்டுமென அறிந்து இரவோடு இரவாகத் தேவையான குழந்தைகளின் வீட்டில் உள்ள கிறிஸ் மஸ் மரங்களில் தேவையான உணவு, உடைகளை பார்சலாகக் கொண்டுபோய் ஒருவருக்கும் தெரியாமல் தொங்கவிடுவார்.

இளமையிலிருந்து மாசற்ற தன்மைக்கும், தூய நெறிக் கும் எடுத்துக்காட்டாக விளங்கிய புனிதர் இன்று வரை குழந்தைகளின் பாதுகாவலராக திகழ்வதுடன், மரித்த பின்பும் எண்ணிலடங்கா அற்புதங்களைச் செய்து வருகின்றார்.

கலாபூஷணம் : புலவர் அரியநாயகம்

படித்தோம் பகிர்வோம்

மன்னார் மறைமாவட்டமும் புதிய ஆயர் நியமனமும்

ஒரு பார்வை

புதிய ஆயர் நியமனம் தொடர்பான அறிவிப்பு

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த புதன் கிழமை (22.11.2017) வத்திக்கான் தூய பேதுருவானவர் சதுக்கத்தில் வழமையாக நடைபெறும் மதிய மூவேளைச் செபத்தின்போது (வத்திக்கான் நேரம் பகல் 12.00 மணிக்கு - இலங்கை நேரம் மாலை 4.30 மணிக்கு) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதேவேளை அன்றையதினம் மாலை 4.30 மணிக்கு மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் புதிய ஆயர் நியமனம் பற்றிய செய்தியைசம்பிரதாயபூர்வமாகஅறிவித்தார். இந்த அறிவிப்பு நிகழ்வுக்காக மன்னார் மறைமாவட்டத்தின் குருக்கள், துறவியர், பொதுநிலைப் பிரதிநிதிகள் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திற்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. புதிய ஆயர் நியமனம் பற்றிய அறிவிப்பை வெளியிட்டதும் கத்தோலிக்க திருச்சபையின் வழக்கப்படி மகிழ்ச்சியின் அடையாளமாக பேராலயத்தின் மணிகள் ஒலித்தன. அதேபோன்று மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து ஆலயங்களின் மணிகளும் ஒலித்தன.

ஓர் ஆயர் ஓய்வு பெறுதலும் புதிய ஆயர் நியமிக்கப்படுதலும்

கத்தோலிக்க திருச்சபையின் சட்டம் 401 பகுதி 1இற்கு அமைவாக ஒரு மறைமாவட்ட ஆயர் 75 வயதை எட்டியதும் தனது பணித்துறப்பை அல்லது ஓய்வை திருத்தந்தைக்கு கடிதம் மூலம் அறிவிக்க வேண்டும். திருத்தந்தை அதை ஏற்றுக் கொண்டு புதிய ஆயர் நியமிக்கப்படும்வரை ஓய்வுபெறும் ஆயரை தொடர்ந்தும் பணிப்பொறுப்பில் இருக்கும்படி கேட்கலாம் அல்லது இன்னுமொரு குருவையோ ஆயரையோ அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமிக்கலாம்.

இதன்படி மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி தனது 75 வயதை எட்டியிருந்தார். அவருடைய பணித் துறப்புக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருகோணமலை ஓய்வுநிலை ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களை மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமித்தார். புதிய ஆயர் நியமிக்கப்படும்வரை ஆயருக்குப் பதிலாக மறைமாவட்டத்திற்கு தலைமைதாங்கி அதன் நிர்வாக, மேய்ப்புப்பணிசார்ந்தகடமைகளை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை சிறப்பாக மேற்கொண்டுவந்தார்.

இந்நிலையில் கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக மன்னார் மறைமாவட்டம் புதிய ஆயரை எதிர்நோக்கிக் காத்திருந்தது. இந்த இரண்டரை வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் திருச்சபையின் சட்டத்திற்கு அமைவாக புதிய ஆயரை நியமிப்பதற்கான பல்வேறு அலுவல்களை, நடைமுறைகளை இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி அவர்கள் மேற்கொண்டிருந்தார். ஆலோசனைகள், கருத்துப் பகிர்வுகள் போன்ற நீண்ட நடைமுறைகளுக்குப் பின்னர் பல நாட்களாக எதிர்பார்த்திருந்த இந்த அறிவிப்பு இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றது.

ஒரு மறைமாவட்டத்திற்கான புதிய ஆயர் கட்டாயம் அந்த மறைமாவட்டத்தில் இருந்துதான் நியமிக்கப்படவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மறைமாவட்டத்திற்குள் இருந்தும் நியமிக்கப்படலாம். மறைமாவட்டத்திற்கு வெளியே அதாவது வேறு மறைமாவட்டக் குருவோ, ஆயரோ நியமிக்கப்படலாம். அந்த வகையில்தான் நீண்ட நெடிய ஆலோசனைகளுக்குப் பின்னர் மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர்களில் ஒருவரான இம்மானுவேல் பொனாண்டோ ஆண்டகை தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய மன்னார் ஆயரின் வாழ்க்கைக் குறிப்பு

மேதகு விடலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் 1948ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். 1951ஆம் ஆண்டு இவருடைய பெற்றோரும் குடும்ப உறுப்பினர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு கிறாண்பாஸ் பகுதிக்கு குடிபெயர்ந்தனர். பின்னர் 1955 ஆம் ஆண்டு கொட்டாஞ்சேனையில் குடியேறினர். இவருடைய தந்தையார் திரு.சேவியர் பஸ்ரியன் பெனாண்டோ (பொறியியலாளர்), தாயார் திருமதி.ஞானசொரூபி பெனாண்டோ. இவருடைய பெற்றோர் இந்தியாவில் உள்ள தூத்துக்குடி மறைமாவட்டக் கத்தோலிக்க பரம்பரையைச் சார்ந்தவர்கள். இவர்களுடைய பிள்ளைகளில் நால்வர் துறவறவாழ்வை ஏற்றுக்கொண்டவர்கள். இருவர் குருக்கள், இருவர் அருட்சகோதரிகள். இப்பிள்ளைகளில் ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ அவர்கள் கடைசி மகன்

அருப்பணி: தமிழ்நேசன் அடிகளார்

ஆவார். இவருடைய மூத்த சகோதரர் அருட்திரு.ஜோ பெனாண்டோ ஆவார்.

இவர் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரியில் பயின்றார். பின்னர் கொழும்பில் உள்ள புனித அலோசியஸ் சிறிய குருமடத்தில் சேர்ந்து தனது குருத்துவத்திற்கான ஆரம்பப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். சிறிய குருமடக் கல்வியை நிறைவுசெய்த இவர் பின்னர் கண்டியில் உள்ள தேசியக் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கற்கைநெறிக்காக அனுமதிக்கப்பட்டார். பின்னர் 1969ஆம் ஆண்டு இறையியல் கற்கைநெறிக்காக உரோமைக்கு அனுப்பப்பட்டார். 1972ஆம் ஆண்டு அங்கு அவர் இறையியல்மாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

ஆயரின் கடந்தகாலப் பணித்தளங்கள்

அன்றைய திருத்தந்தை 6ஆம் பவுல் அவர்களால் 1973ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி உரோமையில் இவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். தொடர்ந்து 1974 ஆம் ஆண்டு உரோமையில் உள்ள ஊர்பானியா பல்கலைக்கழகத்தில் நன்னெறி இறையியல் பயின்று முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டவராய் நாடு திரும்பினார்.

நாடு திரும்பிய இவர், கொட்டாஞ்சேனை புனித ஞாசியா பேராலயம், கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் போன்ற இடங்களில் மறைப்பணி ஆற்றினார்.

தொடர்ந்து 1981 தொடக்கம் 1987 ஆம் ஆண்டுவரை கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் விவிலியப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். 1987 ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று அங்குள்ள வோசிங் கரன் கத்தோலிக்க பல்கலைக்கழகத்தில் இறையியலில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். நாடு திரும்பிய அவர் கண்டி குருத்துவக் கல்லூரியில் உதவி அதிபராகவும், பின்னர் 1989 - 1991 வரையான காலப்பகுதியில் அதிபராகவும் பணியாற்றினார்.

பின்னர் தனது மறைமாவட்டத்திற்கு திரும்பிய இவர் மொறட்டுவப் பகுதியில் பங்குத்தந்தையாகவும், மறைக்கோட்ட முதல்வராகவும் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் தமிழ் கத்தோலிக்க மக்களுக்கு பொறுப்பாக ஆயரின் பதிலாளர் போன்ற நிலைகளிலும் பணியாற்றினார்.

2011 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதி அன்றைய திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் அவர்கள் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் உதவி ஆயராக இவரை நியமித்தார். 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனை புனித ஞாசியா பேராலயத்தில் துணை ஆயராக நியமிக்கப்பட்டார். கடந்த ஆறு ஆண்டுகளாக கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உதவி ஆயர் என்ற நிலையில் தமிழ் கத்தோலிக்க மக்களுக்கு பொறுப்பானவராக இருந்து இவர் சிறப்பாகப் பணியாற்றிவந்தார். இந்நிலையில்தான் தற்போது இவர் மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆயரின் குணநலன்கள்

ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் தலைசிறந்த மனிதநேயவாதி, நற்பண்பாளர், சிறந்த கல்விமான், நன்னெறி இறையியலாளர். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகியமும் மொழிகளிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்றவர். பங்குத்தந்தை, இறையியல் பேராசிரியர், குருத்துவக் கல்லூரி அதிபர், துணை ஆயர் என பல்வேறு நிலைகளில் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவர்.

இன, மத, மொழி, சாதி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று சிந்திக்கவும், செயலாற்றவும் வல்லவர். மிகவும் எளிமையானவர், யாரும் அவரை எளிதில் அணுகலாம்.

நிறைவாக

இலங்கையில் உள்ள 12 மறைமாவட்டங்களில் மன்னார் மறைமாவட்டம் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது. போர்த்துக்கேயர் காலத்தில் வேரூன்றிய கத்தோலிக்க கிறிஸ்தவம் இன்றுவரை கடந்த 500 ஆண்டுகளாக உயிர்ப்புநிலையில் இருக்கின்றது. 700க்கும் அதிகமான கத்தோலிக்க விசுவாசிகள் தமது விசுவாசத்திற்காக உயிர்த்தியாகம் செய்த உன்னதமான வரலாற்றைக்கொண்ட புனித இடமாக மன்னார் கணிக்கப்படுகின்றது. உலகளாவிய மரியன்னை திருத்தலங்களில் ஒன்றாகிய மடு அன்னையின் திருத்தலம் மன்னார் மறைமாவட்டத்தின் இதயமாகக் கருதப்படுகின்றது.

இலங்கையின் நிர்வாக மாவட்டங்களில் மன்னார் மாவட்டத்திலேயே ஒப்பீட்டளவில் கத்தோலிக்கர் அதிகமாக உள்ளனர். எனவே இது கத்தோலிக்க மாவட்டம் என்ற சிறப்பையும் கொண்டுள்ளது. கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்கள் மற்றும் பல்வேறு கலை வடிவங்கள் கடந்த 400 வருடங்களாக இங்கு பயில்நிலையில் உயிர்த்துடிப்புடன் இருக்கின்றன. கடந்த காலங்களில் ஈழத் தமிழ் மக்களின் உரிமைக்குரலாக மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் குரல் ஒலித்துவந்ததை இந்த உலகமே நன்கறியும். இப்படியாக பலவித சிறப்புக்களைக்கொண்ட மறைமாவட்டத்தின் ஆயர் மிகுந்த முக்கியத்துவம் உடையவராகக் கொள்ளப்படுவதில் ஆச்சரியமில்லை. ஆன்மீகம், பௌதீகவளம், சமூக அரசியல் விழிப்புணர்வு, போன்ற பல்வேறு நிலைகளில் மன்னார் மறைமாவட்டம் வளர்ந்து வருகின்றது என்பது உண்மை.

புதிய மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையின் பணிக்காலத்தில் மன்னார் மறைமாவட்டம் இன்னும் சிறப்பான வளர்ச்சியைக் காணும் என நம்பலாம்.

யாங்கூனில் திருத்தந்தை பிரான்சிஸ்

ஐந்து கோடிக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற சிறிய நாடாகிய மியான்மாரில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருத்தூதுப் பயணம் மேற்கொண்டு வருவது, அந்நாட்டு கத்தோலிக்கருக்கு ஒரு புதுமையாகவே இருந்து வருகின்றது.

நவம்பர் மாதம் 27 ஆம் திகதி யாங்கூன் சென்றடைந்த திருத்தந்தைக்கு அமோக வரவேற்பு கொடுக்கப்பட்டது. யாங்கூன் பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து ஆங் சான் சாலை வழியாக பேராயர் இல்லத்திற்கு திருத்தந்தை சென்ற வழி யெல்லாம் மக்கள் வத்திக்கான மற்றும் மியான்மார் நாடுகளின் கொடிகளை ஆனந்தமாக அசைத்த வண்ணம் பாடிக் கொண்டிருந்தனர்.

சீனநாட்டுக் கொடிகள் வேறு பல நாடுகளின் கொடிகள் கூட மக்கள் மத்தியில் காணப்பட்டன. கச்சின், சின், கரேன், ஷான், பமாரீ, ஆடங் ஆகிய இன மக்களின் பாடல்கள் அதிகமாகக் கேட்டன. யாங்கூன் நகரில் இதரமதத்தினர் ஒதுங்கி நிற்க அந்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பயணம் செய்து யாங்கூன் வந்திருந்த கத்தோலிக்கர் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டனர்.

இப்பயணத்தின் முதல் நிகழ்வாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மியான்மார் இராணுவ அதிபர் மின் ஆங் கிளைங் அவர்களை புனித மரியா பேராலயத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். பின்னர் இப்பயண நிகழ்வாக ஒரு பதக்கத்தை திருத்தந்தை இராணுவ அதிபருக்கு பரிசாக அளித்தார். இராணுவ அதிபர் படகு வடிவிலான யாழ் இசைக் கருவியையும், அலங்கரிக்கப்பட்ட அரிசிக் குடுவை ஒன்றையும் திருத்தந்தைக்கு அளித்தார்.

இந் நிகழ்வு இப்பயணத் திட்டத்தில் ஏற்கனவே குறிக்கப்படாமல் இருந்தது என்பது கவனிக் கத்தக்கது. ரொங்கிங்கியா முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறையில் வெளிநாடு களால் இராணுவ அதிபர் குறைகூறப்பட்டு வரும்வேளை திருத்தந்தையின் இச்சந்திப்பு முக்கியத்துவம் மிக்கதாய் நோக்கப்படுகிறது.

தூய யோசவ்வாஸ் இறையியல் கல்லூரி தொடர்பாக அதன் இயக்குநர் அருப்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன் அடிகளாருடனான நேர்காணல்

எமது மறைமாவட்டத்தில் இயங்கும் தூய யோசவ் வாஸ் இறையியல் கல்லூரி பற்றி கூறுவீர் களா?

ஆம். எமது மறை மாவட்டத்திலே தூய யோசவ்வாஸின் நாமத்திலே ஒரு இறையியல் கல்லூரி கடந்த 6 வருடங்களாக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வருகின்றது.

இக்கல்லூரி உருவாக்கப்பட்டதன் நோக்கம் பொதுநிலையினர் மத்தியில் இறையியல் அறிவைப் பெருக்க வேண்டும் எம் மத்தியில் இறையியல் அறிவு கொண்ட பொதுநிலையினர் உருவாக வேண்டும் என்பதே ஆகும்.

1994 ஆம் ஆண்டு இடம்பெற்ற மேப்புப்பணி மாநாட்டில் இம்முன்மொழிவு வைக்கப்பட்டு அதன் அடிப்படையிலே அதற்கான முயற்சிகள் அப்பொழுது குரு முதல்வராக இருந்த அருட்திரு ஸ்ரீபன் எஸ்.கே.இம்மனுவேல் அடிகளாரால் ஆரம்பிக்கப்படவிருந்த போதிலும், போர்ச் சூழல் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக நடைமுறைக்கு வர வில்லை.

ஆயினும் 2012 ஆம் ஆண்டு எமது குருக்கள் மன்றத்தின் வேண்டு கோளுக்கு இணங்க பொதுநிலையினர் கழகத்தின் இயக்குநராக இருந்த நான் அதனைப் பொறுப்பேற்று ஆரம்பித்து வழி நடத்தி வருகிறேன். இப்பொழுது 06 ஆண்டுகளாக இந்தக் கல்லூரி வெகுசிறப் பாக இயங்கி வருகிறது.

ஆரம்பத்தில் எமது ஓய்வுநிலை ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் வழிகாட்டலில் யாழ் மறைக் கல்வி நிலையத்தில் ஆரம்பித்த இந்த இறையியல் கல்லூரி, பின்னர் தற்போ தைய ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள புனித மாட்டீனார் கட்டடத் தொகுதியின் மேல் மாடியில் சகல வசதிகளோடும் அமைத்துத் தரப்பட்டு இயங்கி வருகின்றது.

இந்த இறையியல் கல்லூரியில் எப்படி யான கற்கை நெறிகள் வழங்கப்படு கின்றன? அவற்றினுடைய கல்வித் தகுதி எத்தகையதாக இருக்கின்றது?

தூய யோசவ் வாஸ் இறையியல் கல்லூரி யால் இப்பொழுது கிறிஸ்தவ கற்கைகளில் இளமானிப் பட்டம் அதாவதுBA in (Christian Studies)என்றபட்டம்வழங்கப்படுகிறது. இந்தப் பட்டம் உரோமாபுரியிலுள்ள ஊர்பானியா பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற ஒரு பட்டமாக இருக்கின்றது. உரோம் ஊர்பானியா பல்கலைக்கழகம் இலங்கை பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகமாக இருப்பதுடன் பொதுநலவாய நாடுகளின் பல்கலைக் கழகப் பட்டியலிலும் இணைத்துக்கொள் ளப்பட்ட ஓர் பல்கலைக்கழமாகும். ஆகவே இந்தப் பல்கலைக்கழகத்தின் பட்டம் இலங் கையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டமாக இருப்பத னால் இக்கற்கை நெறியைக் கற்பவர்கள் இலங்கையிலேபட்டதாரிகளாகஏற்றுக்கொள் ளப்படுவார்கள். பட்டதாரிகளுக்குரியஉரிமை களை இலங்கையிலே இவர்கள் பெற்றுக் கொள்வதுடன். மேற்படிப்புக்கானவாய்ப்புக்க ளும் கிடைக்கும். இக்கற்கை நெறிக்கு அனுமதி பெறுவதற்கு க.பொ.த உயர்தரத் தில் சித்தி அடைந்திருப்பதுடன், பல்கலைக் கழகம் செல்வதற்கான தகுதியினையும் பெற்றிருக்கவேண்டும்.

அவ்வாறான தகுதியைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு மூன்று வருடங்க ளுக்கு டிப்ளோமா கற்கைநெறி நடாத்தப் படுகின்றது. இந்த டிப்ளோமா கற்கையை அவர்கள் கற்றுக்கொள்ளலாம். அதற்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். நான்கா வது வருடம் பட்டப்படிப்பு வருடமாக இருக் கும். இந்த நான்கு வருடங்களின் பின்பு பரீட்சை நடாத்தப்பட்டு பட்டச் சான்றிதழ் வழங்கப்படும். ஆகவே ஆர்வமுள்ள வர்கள் இக்கற்கைநெறியில்கலந்துகொண்டு டிப்ளோமா பட்டம் அல்லது இளமானிப் பட்டம் பெற்றுக்கொள்ளலாம்.

இக்கல்லூரியில் குறித்த கற்கைநெறிக் கான வகுப்புகள், பாடவேளைகள் எவ்வாறு நடைபெறுகின்றன?

இக்கல்லூரியின் கற்கைகள் பகுதி நேரக் கற்கையாகவே நடாத்தப்படுகின்றன. பாடங் கள் வார இறுதி நாட்களில் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மாத்திரமே நடை பெறுகின்றன. காலை 9.00 மணி தொடக் கம் பிற்பகல் 2.30 மணி வரை விரை வுரைகள் நடாத்தப்படுகின்றன. ஆகவே, தொழில்புரிபவர்கள்கூட பகுதி நேரமாக வார இறுதி நாட்களிலே இந்தக் கற்கை நெறிகளில் இணைந்து கொண்டு சிறந்த பயனைப் பெறலாம்.

க.பொ.த. உயர்தரத்தை முடித்து விட்டு என்ன செய்வது என்று தெரியாமல் இருப்பவர்கள் இந்த கற்கைநெறியில் இணைந்து கொண்டு அதற்குரிய பட்டப் படிப்பை மேற்கொண்டு தகுந்த பட்டத்தைப் பெற்று தமது வாழ்க்கையை முன்னேற்றிக் கொண்டு செல்வதற்கு நல்லதோர் வாய்ப் பளிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், நாங்கள் இதை உருவாக்கியதன் நோக்கம் இவ்வாறு பட்டதாரிகளை உருவாக்குவதல்ல. மாறாக எமது பங்கு மக்கள் மத்தியில் போதிய வேதாகம, இறையியல் அறிவு கொண்ட பொதுநிலையினரை உருவாக்குவதன் மூலம் நல்ல மறையாசிரியர்களை, நல்ல மேய்ப்புப் பணியாளர்களை உரு வாக்கு வதே ஆகும்.

பங்குத்தந்தையர்கள் தங்களது பங்குகளில் சிறப்பாக பணியாற்றக்கூடியவர்களை அடை யாளம் கண்டு இக்கற்கைநெறிக்கு அனுப்பி வைக்கும்பொழுது நிச்சயமாக எங்களு டைய பங்குகள் வளம்பெறுவதுடன், இறை யியல் அறிவு கொண்ட பல பொதுநிலையினர் உருவாக வழியேற்படும். இதனால் பங்கு களின் பணிகள் சிறப்படைவதோடு, பொது நிலையினர் பெரும் பயனையும் பெற்றுக் கொள்ளலாம்.

கல்லூரியின் இன்றைய நிலை என்ன என்பது பற்றிக் கூற முடியுமா?

கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு ஆறு வருடங்கள் கடந்த நிலையில் சென்ற வருடம் கல்லூரியின் முதலாவது அணியி னர் தங்களுடைய பட்டப் படிப்பை முடித்து 10 பேர் இளமானிப் பட்டதாரிகளாக வெளி யேறியுள்ளனர். இன்னும் மூவர் டிப்ளோமா பட்டதாரிகளாக வெளியேறியுள்ளனர். இதனைவிட இந்த வருடத்திலே 13 பேர் பரீட்சை முடிவடைந்து தங்களுடைய பட்டத்திற்காக காத்திருக்கின்றனர். இவர்க ளுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் வருடத்தில் நடைபெறும். மேலும் அடுத்த வருடம் நடைபெற இருக்கும் இறுதிப் பரீட்சைக்கு 19 பேர் தம்மைத் தயார்படுத்தி வருகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு ஆண்டிலும் பலர் இணைந்து பயன் பெற்று வருகின்றனர். அவர்களின் வழியில் ஏனை யோரும் இணைந்து பயன்பெறுவது பொருத்தமாக இருக்கும்.

இக்கல்லூரி எவ்வாறு இயங்குகிறது? பட்டப் படிப்புக்கான தகுதியை எவ்வாறு பெற்றுக்கொள்கிறது? என்பது தொடர் பாக கூறமுடியுமா?

ஆம், இந்தக் கல்லூரி யாழ்ப்பாணத் திலே தூய யோசவ்வாஸ் இறையியல் கல்லூரி என இயங்குகிறது. இது இலங்கை முழுவதற்குமான உரோமாபுரியின் ஊர் பானியா பல்கலைக்கழகத்தின் கிளையாக இயங்குகின்ற கொழும்பிலே உள்ள தூய யோசவ்வாஸ் இறையியல் கல்லூரியோடு இணைக்கப்பட்டிருக்கின்றது. இங்கு நடாத்தப்படுகின்ற பரீட்சைகள் டிப்ளோமா பரீட்சையாக இருந்தால் என்ன இளமானிப் பட்டப் பரீட்சையாக இருந்தால் என்ன கொழும்பில் இயங்குகின்ற தூய யோசவ் வாஸ் கல்லூரியினரால் நடாத்தப்படுகின்றது. ஆகவே அந்தப் பரீட்சைகளில் அவர்கள் சித்தியெய்துவதைக் கொண்டு ஊர்பானியா பல்கலைக்கழகத்தின் பட்டம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இறுதியாக இக்கல்லூரி தொடர்பாக என்ன கூற முற்படுகின்றீர்கள்?

எங்களுடைய பொதுநிலையினர் இறையியலில் வளரவேண்டும். இறையியல் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அது எங்களுடைய மேய்ப்புப்பணியை பல விதத்தில் சிறப்பாக்குவதற்கு உதவியாக இருக்கும். ஆகவே ஆர்வமுள்ள பொது நிலையினர்கள் இந்தக் கல்லூரியிலே இணைந்து கிடைக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம். இக்கற்கைநெறியைக் கற் பிப்பதற்கு தகுதியான பல குருக்கள் எங்களு டைய மறை மாவட்டத்தில் இருக்கிறார்கள். குறிப்பாக புனித சவேரியார் குருமடத்தில் இறையியல் கல்வி கற்பிக்கப்படுவதால், அங்கு கற்பிக்கின்ற தரமான விரிவுரை யாளர்கள் எமது கல்லூரியிலும் கற்பிக்கின் றார்கள். எனவே பொதுநிலையினர் தர மான இறையியல் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு இந்தக் கல்லூரியில் இணைந்து கொள்வது பெரும் பய னுள்ளதாக இருக்கும். பயிற்றப்பட்ட ஆசிரியர் கள், கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறி வந்திருப்பவர்கள் மற்றும் தமக்கென ஒரு பட்டத்தை பெற்றுக்கொள்ள விரும்புகின்றவர்கள் இக்கற்கைநெறியில் இணைந்து பயன் பெறலாம். ஆகவே பல்வேறு விதமான பயன்தரக்கூடிய இந்தக் கற்கை நெறியின் முக்கியத்துவத்தையும் தேவையையும் பொதுநிலையினர் உணர்ந்து கொண்டு பயன்பெற வேண் டும். பங்குத்தந்தையர்களும் இவ் விடயத் திலே கூடியகவனம் செலுத்தி, தங்களின் பங்கில் இருக்கக்கூடிய பிள்ளைகளை உற்சாகப்படுத்தி, இந்தக் கற்கைநெறி யிலே இணைய ஊக்கம் கொடுக்கவேண்டு மென்று அனைவரையும் கேட்டுக்கொள் கின்றேன்.

இக்கல்லூரி சிறப்பாக இயங்கு வதற்கு ஒத்துழைப்பு நல்கிவரும் ஆயர்கள், குருக்கள், விரிவுரையாளர்கள் இன்னும் பொதுநிலையினர் குறிப்பாக எங்களுடைய பதிவாளராக இருந்து செயற்படும் திரு. பிரான்சிஸ் பெனாண்டோ ஆகியோருக்கு மிக்க நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். தொடர்ந்து இக்கல்லூரி சிறப்பாக நடை பெற உங்களுடைய ஆசிகளும் செபங்க ளும், உதவிகளும் எங்களுக்குத் தேவை யாக இருக்கும். நன்றி

நேர்காணல் : இ.இ.வசீகரன்

இறைமகனின் முதல் வருகை

எந்நாட்டுக்குரிய இயேசுவின் வரலாறு பன்னாட்டுப் பெருஞ்சாலைகள் சந்திக் கும் நசரேத் என்னும் நகரிலே தொடங் குகிறது. நசரேயன் என்று அழைக்கப்பட்ட இயேசு பெருமான் கன்னித்தாயின் கரு விலே உருவாக இருக்கும் மங்களச் செய்தி நசரேத் என்னும் நகரிலேதான் அறிவிக்கப்படுகிறது.

மரியாவுக்கு வானதூதர் மங்க லத் தூது கொண்டு வந்தது குறித்து புனித லூக்1:26-38 வசனங்களில் வடித்திருப்பது கோடானுகோடி பெறும். மரியாவின் பதி லாக "நான் ஆண்டவரின் அடிமை. உமது சொற்படியே எனக்கு ஆகட்டும்" என்றார். உடனே எல்லை கடந்த இறைவன் கன்னியின் கருவில் தம்மை அடைத்துக் கொண்டார். வானதூதர் கபிரியேலும் இறைவனின் அன்னையின் அடிபணிந்து வரும்போது இருந்ததை விட இப்போது மிகுதியான மகிழ்ச்சியுடன் வானகம் நோக்கி விரைந்தார். வானகம் மகிழ்ந்தது. வையகம் மகிழ்ந்தது. மானுடம் மலர்ந் தது, வைகறை புலர்ந்தது. "உருவில்லான் உருவாகி உலகிலொரு மகனுதிப்பக் கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னித்தாய் ஆயினையே" (திருக்காவலூர்க் கலம்பகம் : வீரமாமுனிவர்)

புல்லணையில் மன்னவன் (லூக். 2:1-20) காலம் கனிந்தது. கடவுளின் கருணை விழி மலர்ந்தது. கன்னியின் கருவில் இறைவனின் திருமகன் முழு உருப்பெற்றார். மண்ணுலகில் விண்ணக வேந்தன் பிறக்கும் நேரம் வந்தது. நள்ளி ரவுவேளை உலகமெல்லாம் ஒளி தரு மாறு இதோ பாலகன் இயேசு பிறக்கின் றார். ஏழையரெல்லாம் செல்வராகும் வண் ணம் இறைமகனார் எதுவுமே இல்லாத வாறு பிறக்கின்றார். மானிடரெல்லாம் இறைவனின் பிள்ளைகள் ஆகும் வண் ணம் இறை வனின் ஒரே மகன் நம் வீட் டுப் பிள்ளை யாகப் பிறக்கின் றார். "விண்ணகத்தில் இறைவனுக்கு மாட்சி". மண்ணகத்தில் இறையருள் பெற் றோர்க்கு மிகு நலம். ஒளி உதித்தது, கலி தொலைந்தது, வழிபிறந்தது, விழிதிறந்தது.

குழந்தை இயேசுவுக்கு வானமே கூரை. வாடையே போர்வை, வைக்கோலே பஞ்சணை, கொட்டிலே தொட்டில், தாயாரை ஏற்றி வந்த கழுதையும், தனியாக ஒதுங்கி நின்ற பசுவுமே அவருக்குத் தோழமை. விந்தையான இனிமை, அமைதியான தனிமை, வேறெந்தத் தெய் வமும் காட்டாத கோலம். வரலாறுகாணாத ஒரு திருப்பம், கிறிஸ்துவுக்கு முன் கி.மு.கிறிஸ்துவுக்குப் பின் கி.பி என்று சரித்திரத்தை முன்னிட்டு காண்டமாகப் பிரிக்கும் பொன்னாள்.

கடவுள் நம்மோடு இருக்கிறார் என்பதை ஏழைகளும், சமுதாயத்தில் ஒதுக்கப்பட் டோரும் உணர்ந்து மகிழும் நன்நாள். அந்நேரத்தில் ஊருக்குவெளியே இடையர் கள் சாமக்காவல் காத்துக் கொண்டிருந்தனர். இவர்களைப் பொறுத்தவரையில் அக்காலச் சூழ்நிலையில் இடையர்கள், ஏனைய மக்க ளால் இழிவாகக் கருதப்பட்டவர்களையே தேடிவந்தார். எனவே இறைமகன் இவ் வுலகத்தில் தற்செயலாக வந்து பிறக்க வில்லை. இறைதந்தையின் திட்டத்தின்பிர காரம் இயேசு பிறப்புப் பற்றி முன்னறிவிக்கப் பட்டது. ஆகவே எம்மத்தியில் உண்மை யின் ஒளியாக வந்துள்ள இறை இயே சுவை எமது வாழ்வின் வழியாக ஏற்று அர்த்தமுள்ளகிறிஸ்தவசீடத்துவப்பணியில் நற்செய்தித் தூதுவர்களாக வாழ்வோம்.

வன்னிவாழ் இதயம் ம. சூசைமுத்து

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 . 04 . 1963

மறைவு 15 . 12 . 2016

அலெக்ஸ்சாண்டர் யூலியன்

(குயின்ரன்)

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

அப்பா! அன்புக்கு இலக்கணமாகவும்பாசத்தின் பிறப்பிடமாகவும்
கருணையின் வடிவமாய் இருந்தீரே அப்பா என்னைக்
குழந்தையாக இருக்கும்போது தோளில் சாய்த்து தூங்க வைத்தீரே
இன்று நீங்கள் எங்கே போனீர்கள் அப்பா!
குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து எல்லோரின்
உயர்வுக்காகவும் பாடுபட்டீரே அப்பா, ஆனாலும் உம்முடைய
முத்துப் போன்ற சிரிப்பாலும் பேச்சாலும் எல்லோரையும்
மகிழ வைத்தீரே அப்பா இப்போது
உம்முடைய சிரிப்பும் பேச்சும் எங்கே போனது அப்பா?
இன்று ஓராண்டு ஆனாலும் ஆறாத உமது பிரிவுடன்
என்றும் அழியாத நினைவுகளுடன் இறைவனை
மன்றாடுகின்றோம்.

29, சென் செபஸ்ரியன் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மகள்

விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 22 . 05 . 1940



உதிர்வு 08 . 11 . 2017

அமரர்

பாவிலு அன்ரன் ஜேக்கப்

தந்தையே உமை எண்ணி
சிந்தை கலங்கி அழுகின்றோம்
நின் அன்பு முகம் தேடி
நிதமும் நாம் ஏங்குகின்றோம்
தரணியில் எமை தவிக்கவிட்டு – நீர்
பரமனடி சென்றீரோ
விண்ணில் நீர் இளைப்பாற – எம்
விழிநீர் பூக்கள் தருகின்றோம்

எம் அன்புத் தந்தையின் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி 09.12.2017 சனிக்கிழமை காலை 6.45 மணிக்கு இளவாலை புனித யூதா ததேயு ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் கலந்து இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்

பிரிவுத் துயரில்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

AD113

நெஞ்சம் மறவாத 4ம் வருட நிலைவலைகள்

மண்ணில் 17 . 01 . 1937

விண்ணில் 05 . 12 . 2013

சந்தியோ அந்தோனிப்பிள்ளை எட்வேட்ஸ் (JP)

(இளைப்பாறிய NRTB அத்தியட்சகர்)

"உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன் நீ எனக்கு உரியவன்" (எசாயா 43-1)

காலச் சக்கரத்தில் நான்கு ஆண்டுள் பறந்தோடியும்
இதய ஓலங்கள் ஓயவில்லை
உம் ஆன்மா இறை சந்நிதியில் இளைப்பாற வேண்டுகிறோம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 06.12.2017 புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆனையூர் தூய அடைக்கலநாயகி ஆலயத்திலும் 05.12.2017 செவ்வாய் காலை 6.00 மணிக்கு யாழ். பேராலயத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

உயரப்புலம், ஆனைக்கோட்டை

AD/108

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Holy Cross School of Health Science

Diploma in Nursing (02 Years)

Certificate in Nursing (09 Months)

க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்களும் க.பொ.த. சாதாரணதரம் கற்றவர்களும் தங்களது சுய விபரக்கோவையை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்பி வைக்க வேண்டிய முடிவுத் திகதி 31.12.2017

அனுப்பவேண்டிய முகவரி:
திருச்சிலுவை தாதியர் பாடசாலை,
இல 767/4 கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0771159391 - 021 300 1102

கத்தோலிக்க அச்சகத்தில் மலிவு விற்பனை

பாலன் பிறப்பு திருச்சொரூபங்கள்
கிறிஸ்மஸ் மரம், கிறிஸ்மஸ் குடில், கிறிஸ்மஸ் அலங்காரப் பொருட்கள், ஸ்ரிக்கர்கள் என்பனவும் வேதாகமம் மற்றும் மோட்சபாதை என்பனவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணக இனிய வாழ்வின்

18ம் வருட நினைவுகளில்

பிறப்பு 18 . 10 . 1933

இறப்பு 01 . 02 . 1999

அமரர்
ந.கணேஸ் பீற்றர்

31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 16 . 12 . 1971

இறப்பு 28 . 10 . 2017

அமரர்
பீ.அன்ரனி யூட் றொபின்
(மக்கள் வங்கி)

4ம் வருட நினைவுகளில்

பிறப்பு 11 . 04 . 1941

இறப்பு 20 . 01 . 2014

அமரர்
கணேஸ் பீற்றர் மேரி மெக்றலீன்
(ராணி)

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கின்றேன்" (லூக். 23:43)

அன்பின் இயேசுவே இவ்வுலகில் நீர் எமக்கு அளித்த பெற்றோருக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.

தம்பி நீ இறந்த செய்தி அறிந்த
எங்கள் இருதயம் ஒருகணம்
செயல் இழந்து நின்றது ஐயா!
உள்ளமோ இருதலைக் கொள்ளி எறும்பு போல துடிதுடித்தது ஐயா
என்ன செய்வேன் ஏது செய்வேன் என்றது எங்களது ஐம்புலன்களும்
இன்று நீ எங்கே என்கிறது
எங்கள் நினைவுகளின் நிஜங்கள்
உனக்காக பிரார்த்திக்கும் உன் உடன் பிறப்புக்கள்

Ad/109, 112

புதுவீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

இரண்டு அண்ணன், அக்கா
மற்றும் பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

கத்தோலிக்க அச்சகத்தில்
அருள்வாக்கு வேதாகம
நாட்குறிப்பேடு
225/= மட்டுமே

வினைத்திறன் செயற்பாடுகள்

26.11.2017 அன்று கியூடெக் கரித்தாஸ் அருட்தந்தை யூஜின் பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வினைத்திறன் செயற் பாடுகள், பயிற்சிப்பட்டறைகள் என்பன ஆசிரியர்களுக்கு நடைபெற்றது. அதில் அனைத்து ஆசிரியர்களும் இப்பயிற்சியில் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பயிற்சியினை வண்ணாத்துப் பூச்சி முன்பள்ளி சிறுவர் பராமரிப்பு இயக்குனரும் யாழ் கல்வி வலய அதிகாரி யுமாகிய ரி.சிவகுமார் வளவாளரால் பயிற்சி வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

தேசிய இளையோர் வாரத்திற்கான நிதிசேகரிப்பு

யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தினரால் தேசிய இளையோர் வாரத்தை முன்னிட்டு யாழ் மறைமாவட்ட ஆயர் தலைமையில் கொடிவாரம் செப் 23 தொடக்கம் ஒக்ட்01 வரை அனுஷ்டிக்கப்பட்டது.

இக்கொடிவாரத்தில் மறை மாவட்டத்தின் அனைத்து பங்குகளில் இருந்தும் உண்டியல் மூலமாக ரூபா 51658.00 நிதி சேகரிக்கப்பட்டது.

இந்நிதி உதவியினைச் செய்த மறை மாவட்டங்களில் உள்ள அனைத்து இளையோர் மற்றும் பொது மக்களுக்கும் யாழ் மறை மாவட்ட இளையோர் ஒன்றியத்தினால் நன்றியினைத் தெரிவித்து நிற்கின்றோம்.

இயக்குநர்
யாழ் மறைமாவட்ட இளையோர்
ஆணைக்குழு

உரும்பிராய் பங்கின் புன்னாலைக்கட்டுவன் புனித இராயப்பர் ஆலயத்தில் கடந்த 05.11.2017 அன்று அருட்பணி ம.பத்திநாதர் அடிகளாரால் 11 பிள்ளைகளுக்கு முதல்நன்மை வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மறை .....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாடு திரும்பிய அவர் கண்டி குருத்துவக் கல்லூரியின் உதவி அதிபராகவும், பின்னர் அதிபராகவும் நியமிக்கப்பட்டார்.

கொழும்பு மறைமாவட்டத்தின் மொறட்டுவப் பகுதியில் பங்குத்தந்தையாகவும், மறைக்கோட்ட முதல்வராகவும், கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் தமிழ் கத்தோலிக்க மக்களுக்குப் பொறுப்பாக ஆயரின் பதிலாளராகவும் பணியாற்றினார்.

2011 ம் ஆண்டு நவம்பர் 28ம் திகதி அன்றைய திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களால் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் உதவி ஆயராக நியமிக்கப்பட்ட இவர், 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமனம் பெற்றார்.

தற்போது மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக பொறுப்பேற்றுள்ள மேதகு இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகை இன்னலுறும் தமிழ் மக்களின் துயர் துடைத்து மக்களை வழிநடத்த இறைவனின் அருளாசி வேண்டி யாழ். மறை மாவட்ட சமூகம் வரவேற்று வாழ்த்துகின்றது.

திருக்குடும்ப சபை ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வாதாரத்துக்காக மற்றும் பொழுது போக்கிற்காக சில கைப்பணி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இச்செயற்திட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக இச்செயற்திட்டத்தின் இலக்குக் குழுவினரால் 26.11.2017 அன்று மல்லாவி மத்திய கல்லூரியில் ஒளிவிழா, கலாசார நிகழ்வு மற்றும் கண்காட்சியும் விற்பனையும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருக்குடும்ப சபையின் 5 அழைத்தல்களின் அருட்சகோதரிகள், துணைக்குருக்கள், திருமடசார்பற்ற சகோதரிகள் மற்றும் பல்வேறு இடங்களில் உள்ள பொதுநிலையினர் பங்குபற்றினர்.

இந்நிகழ்வில் திருக்குடும்ப சபை யாழ் மாகாணத் தலைவி அருட். சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ் அவர்களால் மங்கள விளக்கு ஏற்றி வைக்கப்பட்டு இந் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. ப.யோ.ஜெபரட்ணம் அவர்களால் கண்காட்சி மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. ஒளிவிழா, கலாசார நிகழ்வு என்பனவும் நடைபெற்று இந்நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

இலங்கை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தமிழ் பேசுகின்ற இளைஞர் யுவதிகள் பலர் மடுத்தாயாரின் திருச்சந்திதியிலிருந்து மாபெரும் செபமாலை அடையாளத்தைக் கையிலேந்தியபடி மடுமாதா திருத்தலத்தில் அமைந்துள்ள தியான இல்லத்தை நோக்கி திருச்செபமாலை செபித்துக் கொண்டு பவனியாக வந்தனர்.

தியான இல்லத்திற்குச் செல்லும் பிரதான வீதியின் தொடக்கத்தில் வைத்து மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் பேரருட் கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை, மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி அந்தனி விக்ரர் சோசை, இலங்கை கத்தோலிக்க இளைஞர்களுக்கான இயக்குனர் அருட்பணி மல்கம் பெரேரா, மறை மாவட்ட இளைஞர் பணிக்குழு இயக்குநர்கள் மாலை அணிவித்தும், மாநாட்டுப் பிரதிநிதிகளான இளைஞர்கள் மலர் வழங்கியும் தமிழர் தம் பண்பாட்டுக் கோலங்களை வெளிப்படுத்தும் கோலாட்டம், குதிரையாட்டம் போன்றவற்றின் மூலமாகவும் மாநாட்டு மண்டபம் வரை அழைத்து வரப்பட்டனர்.

கத்தோலிக்க இளைஞர்களுக்குப் பொறுப்பான இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் வழிகாட்டியான யாழ் ஆயர்பேரருட்திருயஸ்ரின்ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தில் சமூகமளிக்க முடியவில்லை. தொடர்ந்து கலைபண்பாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

25ம் திகதி சிறப்பு விழிப்புணர்வு வலுவூட்டல் நிகழ்வுகளும், 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வங்காலை தூய அன்னம்மாள் ஆலயத்தில் மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் பேரருட்கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் திருப்பலியும் இடம் பெற்று நிகழ்வுகள் சிறப்பான முறையில் நிறைவடைந்தன. இந்நிகழ்வில் யாழ்ப்பாண மறை மாவட்ட இளையோரும் கலந்து கொண்டார்கள்.

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான ஒப்புரவு செயற்பாட்டில் நல்லாட்சியை நிலைநாட்டல் செயற்றிட்டத்தின் கீழ் நெடுந்தீவுப் பகுதியில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குனர் அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் சமாதானக் குழு அமைக்கப்பட்டு குழுச் செயற்பாடுகள் பல இடம்பெற்று வருகின்றது.

கார்மேல் முன்பள்ளி சிறுவர்களின் பெற்றோர் தின விழா

கார்மேல் முன்பள்ளி சிறார்களினால் இவ்வாண்டிற்கான பெற்றோர் தின விழா நிகழ்வானது 26.11.2017 அன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கோலாகலமாக இடம்பெற்றது. இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக அருட்பணி அன்புராசா (அமதி) அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக சிறுவர் நன்னடத்தைப் பிரிவு உத்தியோகத்தர் திரு.கௌதமன் அவர்களும், அருட்சகோதரி ஜொய்ஸ்மாறி (A.C) அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கியூடெக் கரித்தாஸ் சர்மமத சக வாழ்வினரின் சிலாபம் வெளிக்களத் தரிசிப்பு

யாழ். கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் அருட்பணி ச.யூஜின் பிரான்சிஸ் அடிகளாரின் ஆலோசனை வழிகாட்டலின் கீழ் சர்வமத சக வாழ்வு அரங்கத்தின் சமய சமூகத் தலைவர்கள் வெளிக்களத் தரிசிப்புப் பயணமாக கார்த்திகை 11,12 ஆம் திகதிகளில் சிலாபம் மறை மாவட்ட ஜனசவிய செடக் நிறுவன சர்வமத சக வாழ்வுப் பணித் தளங்களில் களத் தரிசிப்பினையும், கலந்துரையாடலையும் மேற்கொண்டனர்.

கஸ்டப் பிரதேசமான மருதங்குளி றெற்பானா முஸ்லிம் பாடசாலைகளில் நடைபெற்ற கலந்துரையாடலில் முஸ்லிம், பௌத்த இந்து சகோதரர்கள் மத்தியில் மூவின மக்களின் மனப்பதிவுகள் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

நவரங்குளம் கிராம மக்களுடனான தரிசிப்பும் இதன்போது இடம்பெற்றது. கரித்தாஸ் சிலாபம் இயக்குனர் அருட்பணி வைமன் அடிகளார் மற்றும் பங்குத் தந்தையர்கள், மௌலவிகள், இந்துகிறிஸ்தவ பௌத்தமதத் தலைவர்கள், பொதுமக்கள் என்பவர்களுடனான கலந்துரையாடல்கள் சிறப்பாக இடம்பெற்றதுடன் பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்று சமயங்கள் கூறும் சர்வமத சக வாழ்வை சுவைக்கும் நிகழ்வாக இந்நிகழ்வு அமைந்திருந்தது.

'அகவொளியில்' திருமண ஆயத்த வகுப்பு

அகவொளியில் திருமண ஆயத்தக் கருத்தரங்கு இம்மாதம் 16 ஆம் திகதி சனின்கிழமை, 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை நடைபெறும். இவ்வாண்டிற்கான இறுதி திருமண ஆயத்த வகுப்பு இதுவாகும்.

யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தினால் நாடாத்தப்படும் அமரர் அருட்பணி சரத்ஜீவன் ஞாபகார்த்த கிறிஸ்மஸ் கரோல் குழுப்பாடல் போட்டி

யாழ் மறைமாவட்டகத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தினால் நாடாத்தப்படும் அமரர் அருட்பணி சரத்ஜீவன் ஞாபகார்த்த கிறிஸ்மஸ் கரோல் குழுப்பாடல் போட்டி "இளையோர் நாம் இறை ஒளியில் - மாறிடுவோம் மாற்றத்தை நோக்கி" என்ற மையக் கருவில் இம்மாதம் 9ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது. இப்பாடல் போட்டிக்கு ஏராளமான இளையோர் குழுக்கள் பங்குரீதியாக பங்குபற்ற உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பரிசு விபரம்

1ம் பரிசு ரூபா 10000.00
2ம் பரிசு ரூபா 5000.00
3ம் பரிசு ரூபா 3000.00
பங்கு பற்றும் குழுக்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2017 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.